Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 16 செவ்வாய்க்கிழமை (02-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:310

# மட்டக்களப்பில் முஸ்லிம்களுக்காக தனியாக ஊர்காவல்படை அமைப்பு!

## ஐநூறு இளைஞர் திரட்டப்படுவராம்

மட்டக்களப்பு,ஒக்ரோபர்2

**மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேச மக்களின் பாதுகாப்புக்காக ஐநூறு முஸ்லிம் இளைஞர்களைக் கொண்ட ஊர்காவல் படை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மேற்கொண்டுள்ளார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.**

காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களின் பாதுகாப்புக்காகவே இந்த ஊர்காவல்படை அமைக்கப்படவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் விடுதலைப் புலிகளால் இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதுகாப்பின்மையைக் கருத்திற்கொண்டே இது அமைக்கப்படுவதாகவும் -

இந்தக் கிராமங்களில் மேலதிக பொலீஸ் மற்றும் இராணுவ நிலைகளை அமைப்பது தொடர்பாகவும் தாம் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் -

அவர் மேலும் தெரிவித்ததாக அந்தச் செய்தி ஏஜென்ஸி குறிப்பிட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்ட பின்னர், அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் அணியில் ஹிஸ்புல்லா இடம்பெற்றிருப்பது தெரிந்ததே.

(10ஆம் பக்கம் பார்க்க)

## கம்பூச்சியாவிலிருந்து புலிகளுக்கு ஆயுதம்?

கொழும்பு,ஒக்.2

கடந்த வாரம் கம்பூச்சியா நாட்டில் இருந்து கடல் வழியாக விடுதலைப் புலிகளுக்குப் பெருமளவு நவீன ஆயுதங்கள் வந்து சேர்ந்ததாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்றை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பல்குழல் றொக்கட் செலுத்திகள் அவற்றுக்குரிய றொக்கட்டுகள், நவீன விமான எதிர்ப்பு ஆயுதங்கள் என்பனவும் அவற்றில் அடங்குகின்றன எனவும் -

இந்த ஆயுதங்கள் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு, வாகனங்கள் மூலம் முல்லைத்தீவுப் பகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டிருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' தனது அந்... செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (உ-...)

## யாழ். ஆஸ்பத்திரி மனிதப் புதைகுழி தோண்டும் பணி நாளை ஆரம்பம்

யாழ். ஆஸ்பத்திரி வளவுக்குள் இருப்பதாகக் கருதப்படும் மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணி நாளை முதல் மூன்று தினங்கள் இடம்பெறவிருப்பதாக யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தெரிவித்தார்.

இந்தப் புதைகுழியைத் தோண்டும் பணிக்காக காலி சட்ட வைத்திய அதிகாரி றுவன்புர, பதில் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.பெர்னாண்டோ மற்றும் தயானந்த சமரவீர ஆகியோர் கொண்ட குழு நாளை இங்கு வந்து சேரும் என்று யாழ். குற்றத் தடுப்பு பொலீஸ் பொறுப்பதிகாரி யாழ்.நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

அதையடுத்தே, தோண்டும் பணியை நாளையே ஆரம்பிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிய சவச்சாலையை அமைப்பதற்காகக் கடந்த 18ஆம் திகதி அத்திவாரம் வெட்டிய சமயம் அங்கு மனித மண்டையோடுகள், எலும்புகள் ஆகியன மீட்கப்பட்டதும் -

அந்தப் பகுதியில் மேலும் மனித எச்சங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறியும் பணிக்காக நிபுணர் குழுவைக் கொழும்பில் இருந்து அழைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டிருந்ததும் - தெரிந்ததையே. (உ-3-10)

## புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.பாடசாலை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.2

நேற்று கொழும்பில் வெளியான 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின்படி குடாநாட்டில் முக்கிய பாடசாலைகள் சிலவற்றில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு:-

| | |
|---|---|
| ★ சென்.ஜோண் பொஸ்கோ | - 74 |
| ★ யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை | - 71 |
| ★ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை | - 45 |
| ★ சுண்டுக்குளி மகளிர் | - 25 |
| ★ உடுவில் மகளிர் கல்லூரி | - 24 |
| ★ சென்.ஜோன்ஸ் கல்லூரி | - 23 |

(10ஆம் பக்கம் பார்க்க)

### ஐக்கிய இலங்கைக்குள் நிரந்தரத் தீர்வு காண்பதற்கு

## அரசு - ஐ.தே.க. இணைந்து புலிகளுடன் பேசுவதை ஜே.வி.பி. ஆட்சேபிக்காது!

கொழும்பு,ஒக்.2

ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் வகையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐ.தே.கட்சியும் இணைந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவார்களேயானால் -

அதற்காக -

நாம் தற்போது அவருடன் செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 20ஆவது ஷரத்தில் உள்ள தடையை நீக்க எமது அமைப்புத் தயாராக உள்ளது.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்றோ, நடத்தக்கூடாது என்றோ நாம் குறிப்பிடவில்லை. பேச்சு நடக்கும் போது அதை எதிர்க்கவோ, ஆதரிக்கவோ உடன்படிக்கை தடையாக இருக்காது.

தனிநாட்டுக் கோரிக்கை என்ற நிலைப்பாட்டுடன் புலிகள் பேச்சுக்கு வந்தால் அந்தப் பேச்சை நாம் எதிர்ப்போம் - என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார். (உ-3)

## போக்குவரத்துக் கண்காணிப்பு தொண்டர்கள் மீது தாக்குதல்

### இருவர் கைது செய்யப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்நகரில் வீதி ஒழுங்குகளைக் கண்காணித்துக்கொண்டிருந்த இரு போக்குவரத்துத் தொண்டர்களைத் தாக்கியதாகக் கூறப்படும் இருவரைத் தாம் கைது செய்துள்ளதாக யாழ் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் கஸ்தூரியார் வீதி - மின்சார நிலைய வீதிச் சந்தியில் இரு போக்குவரத்துத் தொண்டர்கள் வீதிப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்ததாகவும் -

அப்போது ஒருவழிப்பாதையில் வீதியை மீறி மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரை அவர்கள் தடுத்து நிறுத்தியதாகவும் -

அதனால் ஆத்திரமடைந்த அந்த நபர் போக்குவரத்துத் தொண்டர்களைத் தாக்கிவிட்டுச் சென்றதாகவும் -

போக்குவரத்துப் பொலீஸ் அதிகாரி எஸ்.ஜ.உடுவல்ல தெரிவித்தார்.

தாக்கப்பட்ட போக்குவரத்துத் தொண்டர்கள் இருவரும், மணியம் கட்டடத்தில் உள்ள அவர்களது தலைமையகத்தின் ஊடாக பொலீஸில் முறைப்பாடு செய்ததையடுத்து சம்பவ இடத்துக்குப் பொலீஸார் விரைந்ததாகவும் -

அந்தச் சமயத்தில் மீண்டும் அங்கு மற்றொருவருடன் வந்த அந்த நபர், மறுபடியும் போக்குவரத்துத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 3மீனவர்களும் கரை திரும்பினர்

யாழ்ப்பாணம்,ஒக்.2

வடமராட்சிக் கடலில் நேற்றுமுன் தினம் மீன்பிடிக்கச் சென்ற போது, காணாமற்போன 3 மீனவர்களும் நேற்றுக்காலை கரை வந்தடைந்தனர்.

கடல் கொந்தளிப்பினால் படகைச் செலுத்த முடியாததால், நங்கூரம் பாய்ச்சி விட்டு, கடலிலேயே இரவைக் கழித்ததாகவும் நேற்றுக் காலையில் காற்றும், கொந்தளிப்பும் குறைந்ததால் கரைதிரும்பியதாகவும் அந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

அவர்களில் பருத்தித்துறை இன்பருட்டியைச் சேர்ந்த ஆனந்த சிவம் சிவகரன் (வயது23) என்பவர் சிகிச்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மீன் பிடித்துக்கொண்டிருந்த பெண் துப்பாக்கிச் சூட்டுக்கு மரணம்!

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு,ஒக்.2

மட்டக்களப்பு நகரில் மங்கிக்கட்டு வாவியில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் மீது விமானப் படையினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் மீனவப்பெண் ஒருவர் உயிரிழந்தார், அவரது மைத்துனர் படுகாயம் அடைந்தார்.

நாவற்காட்டைச் சேர்ந்த சிவஞானம் மனோகரி (வயது39) என்ற பெண்ணே மரணமானவர் ஆவார். அவரது மைத்துனரான செல்லையா சிறீதரன் (வயது29) என்பவர் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாபப் பெண்ணின் கணவன் 90ஆம் ஆண்டு விமானப்படையின் தாக்குதலில் உயிரிழந்தார் என்றும் -

அதன் பின்னர் மனைவி மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அவரின் திறமையைப் பாராட்டி மட்டக்களப்பு மீனவர் சங்கம் அவருக்கு சிறந்த மீனவர் விருதை அண்மையில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

### மட்டக்களப்பில் மோதல்

மட்டக்களப்பு,ஒக்.2

மட்டக்களப்பு நகருக்குள் திருப்பெருந்துறை வாவி ஊடாக நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் ஊடுருவமுனைந்ததாகவும் -

அச்சமயம் அவர்களுக்கும் விமானப்படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகவும் - பாதுகாப்புத்தரப்பு தெரிவித்துள்ளது

சுமார் 10 நிமிடங்கள் இந்த மோதல் நீடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-4)

## ஊர்காவல் படை சூட்டில் இளைஞர் பலி; ஒருவர் காயம்!

கொழும்பு,ஒக்.2

திருகோணமலை மாவட்டம், மூதூர், தங்கநகரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஊர்காவல் படையினர் கண்மூடித்தனமாகச் சுட்டதில், வீடொன்றில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் காயமடைந்ததாக இணையத்தளச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

கனகசுந்தரம் மோகன்(வயது26), என்பவரே உயிரிழந்ததாகவும் சின்னப்பு ஜெயராஜா(வயது26) என்பவர் காயமடைந்து திருகோணமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சிறுவர், கர்ப்பிணிகளுக்கு சத்துணவு

பளைப்பிரதேச சபையில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோருக்கு சத்துணவுகளை நெல்லியடியில் இயங்கும் சபை அலுவலகத்தில் வைத்து வழங்கிவருகின்றனர். (ஒ-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### செல்வி நிவேதிகா உதயகுமார்

அவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சென்ஜோண் பொஸ்கோ பாடசாலையில் முதலாவது இடத்தையும் யாழ்.மாவட்டத்தில் ஆறாவது இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் எமது கலட்டிப் பகுதிக்கும் பெருமை சேர்த்ததையிட்டு பெருமகிழ்வடைவதோடு அவரைப் பராட்டியும் வாழ்த்துகின்றோம்.

*- கலட்டி வாழ் மக்கள்.*

(C/18485)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### செல்வி ஜெயச்சந்திரன் சாரங்கா

2001 ஆம் ஆண்டின் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் ஜெயச்சந்திரன் சாரங்கா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) 142 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் நாவலர் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.
இவரை மேலும் கல்வியில் சிறந்து வளர வாழ்த்தும்....

அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, ஐயா, அப்பப்பா, பெரியமாமா, பெரியத்தை, பெரியப்பா, பெரியம்மா, சின்னமாமா, சின்னத்தை, ஆசை மாமா, ஆசை அத்தை, சித்தப்பா, சித்தி, சீனியப்பா, சீனியத்தை, குட்டி மாமா, ரூபன் மாமா, ஆரியகுளம் பெரியப்பா, பெரியம்மா, கொக்குவில் பெரியம்மா, பெரியப்பா, சிவதாசன் மாமா, அத்தை, ராசன் சித்தப்பா - சித்தி (பிரான்ஸ்), பெரியத்தை, பெரியமாமா, கட்டைப்பிராய் ஐயா மற்றும் சகோதர சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

*8/21, கற்குள லேன்,*
*கொட்டடி, யாழ்.*

(92884)

தகவல்:
இ.ஜெயச்சந்திரன்
(அப்பா)


## எரிக் கணேஷ்

★ உங்கள் அழகை மென்மேலும் மெருகூட்ட உங்கள் முகப்பொலிவுக்கமைய பல் கட்டவேண்டுமா?
★ இதற்கு முன்பு வேறெங்காவது பல் கட்டி உங்களுக்கு திருப்திபடாத பட்சத்தில் அதனை மீள அழகிய முறையில் சரிபார்த்துக்கொள்ளவும்
★ மிதந்த பற்களுக்கு கிளிப் போட்டுக்கொள்ளவும்
★ கண்களைப் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்
நாடுங்கள்

### எரிக் கணேஷ்

*பல் கட்டுமிடமும் மூக்குக் கண்ணாடி அகமும்*

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் - T.P.2486

*கிளைகள்*

91, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்

80, பழைய பொலீஸ்
நிலையம் முன்பாக,
சுன்னாகம்.

*விசேட குறிப்பு:*
★ மிதப்புப் பற்கள் 3 மாதங்களில் சீரமைக்கப்படும்.
★ சுன்னாகத்திலும் கொக்குவிலிலும் உள்ள எமது கிளைகளில் குறைந்த கட்டணத்தில் செய்யப்படும்

(C/18484)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி கந்தையா இராசம்மா

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கருங்காலி போசுட்டி முருகனை பிரார்த்திக்கின்றோம்.

*கருங்காலி,*
*காரைநகர்.*

(92886)

திருப்பணிச் சபையினர்,
போசுட்டி முருகமூர்த்தி கோயில்.

## காற்றில் கலைந்த கருங்குளவிகள் 7பேரைத் தாக்கின!

தென்மராட்சி,ஒக்.2

குடாநாட்டில் நேற்றுமுன்தினம் வீசிய கடும் காற்றினால் வீழ்ந்த பனையோலைகளிலிருந்து புறப்பட்ட கருங்குளவிகளால் தாக்கப்பட்ட நான்கு பெண்கள் உட்பட ஏழு பேர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த சின்னத்துரை சோமசுந்தரம் (வயது 35), வரணி தெற்கைச் சேர்ந்த கந்தசாமி பாலகுமார் (வயது15), துன்னாலை மேற்கைச் சேர்ந்த கந்தையா குலதிலகராஜா (வயது52), புலோலி மேற்கைச் சேர்ந்த இரத்தினசபாபதி தங்கம்மா (வயது55), வரணியைச் சேர்ந்த ஆச்சான் வள்ளிப்பிள்ளை (வயது72), துன்னாலை மத்தியைச் சேர்ந்த பொன்னம்பலம் சிவபாக்கியம் (வயது52), கரவெட்டி மத்தி அரசடியைச் சேர்ந்த சோதிக்குமார் பிரியதர்சினி (வயது16) ஆகியோரே கருங்குளவிகளால் கொட்டப்பட்டவர்களாவர்.

இவர்களில் இ.தங்கம்மா, து.வள்ளிப்பிள்ளை ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஒ-117)

## பிணை வழங்குவதை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை

கொழும்பு,ஒக்.2

குற்றவியல் (கிரிமினல்) வழக்குகள் விடயத்தில் பிணைவழங்குவதைக் கட்டுப்படுத்தும் விதத்திலான திருத்தச் சட்டமூலம் ஒன்று விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதி, இனவிவகார, தேசிய நல்லிணக்க அமைச்சர் பட்டி வீரக்கோனின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிணைச்சட்டம் இலக்கம் 30ஐ திருத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை அமைச்சர் பெற்றுள்ளதாகவும் விரைவில் இந்தச் சட்டமூலம் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாலியல் வல்லுறவு, பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் பாலியல் துன்புறுத்தல், சிறுவர் துன்புறுத்தப்படல், சிறுவரைக் கடத்தி விற்பனை செய்தல் போன்றவை பிணை மறுக்கப்படக்கூடிய குற்றங்களாகும்.

அரசுக்கெதிரான பிணைமறுப்பு வழங்கப்படத்தக்க வழக்குகள் மற்றும் பாதுகாப்புப் படையினர் தொடர்புபட்ட வழக்குகள் என்பனவும் இவற்றுள் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## காங்கேசன் தடுப்பு முகாமுக்கு அதிகாரி விஜயம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக ஆதிகாரி என்.ஜீவேஸ்வரா நாளை புதன் கிழமை காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடிதங்கள் மற்றும் பொருள்களை அப்போது எடுத்துச்சென்று கையளிப்பார். (ஒ-10)

## 'கோடா' வைத்திருந்த வல்வை வாசிக்கு ரூ. 75 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி,ஒக்.2

கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கான 100 லீற்றர் 'கோடா' வைத்திருந்த வல்வெட்டித்துறை வாசிக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

பருத்தித்துறை மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி றொகான் சஞ்சே ராஜ"வினால் பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் வல்வெட்டித்துறை, ஆதிகோயிலடியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் சூரியகுமார் என்பவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் ஒருவருட மறியலும், ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தாயின் மடியில்
06 - 02 - 1938



இறைவன் அடியில்
02 - 09 - 2001

அமரர்
### தம்பையா சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய உபதபாலதிபர், ஏழாலை தெற்கு)

*நித்த நித்தம் உங்கள் நினைவில் வெந்து*
*நினைவெல்லாம் நீங்களேயாகி நொந்து*
*சித்தம் கசிந்து உங்களுக்காய் உருதகின்றோமே!*
*நாம் சேர்ந்திருந்த காலம் மீண்டும் வருமோ அப்பா!*

இன்று (02-10-2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறும்பன் வளவு,*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

(92867)

- மனைவி, மகன்,
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர்
திரு. க.தர்மலிங்கம் அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி தங்கம் கணபதிப்பிள்ளை

அவர்கள் 30.09.2001இல் சிவபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
*யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி*

(92867)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை கணேசமணி

(இளைப்பாறிய ஆசிரியர் (B.Sc. Hons), யாழ். மத்திய கல்லூரி)

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நிரந்தர முகவரியாகவும் உடுவில் றோட், மருதனார்மடத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கணேசமணி நேற்று (01.10.2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுகுணவதியின் அன்புக் கணவரும், குமரன் (முகாமைத்துவ பீடம், 2ஆம் ஆண்டு, யாழ். பல்கலைக்கழகம்), சங்கீதா (சா/இந்துக் கல்லூரி, மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - திரவியம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற இராசலிங்கம் - கமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவமணி, காலஞ்சென்ற Dr.வேல்மணி, ஆனந்தமணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாவதி (நகரசபை, சாவகச்சேரி), கலாநிதி (ஜேர்மனி), நீலாவதி, புஸ்பவதி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் தற்போதைய வசிப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தற்போதைய முகவரி:*
*உடுவில் றோட்,*
*மருதனார்மடம்.*

(92885)

தகவல்:
சுகுணவதி
(மனைவி)

### விக்னேஸ்வரன் சிவானந்தராசா

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்கொண்ட விக்னேஸ்வரன் சிவானந்தராசா 30.09.2001 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விக்னேஸ்வரன் மற்றும் யோகராணி தம்பதியினரின் நான்காவது புத்திரனும் ஸ்ரீகுமார், சுகுமார்(கொழும்பு), மோகனதாஸ்(லண்டன்), திருமதி ச.கமலினி (நோர்வே), திருமதி ச.செல்வமலர், வி.பவானி (மாணவி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), ஆகியோரின் அன்புச் சகோதரனும் சி.சாந்தகுமார் (நோர்வே), சி.சச்ரூபன் (யாழ்.பல்கலைக்கழகம், மராமத்துப் பிரிவு), தயாலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தயாபரன், சிறிகரன், குககரன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஜசந்துவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2001) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வன்னியசிங்கம் வீதி,*
*இருபாலை றோட்,*
*கோண்டாவில் கிழக்கு.*

(92882)

தகவல்:
தாய், சகோதரர்கள்.



அமெரிக்காவின் தாக்குதலுக்கு இலக்காகக்கூடும் என எதிர்பார்க்கப்படும் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறி பாகிஸ்தானிலுள்ள குவாட்டா அகதிகள் முகாமில் தங்கியுள்ள ஆப்கானிஸ்தான் அகதிச்சிறுவர்களையும், ஆப்கானிஸ்தானின் வடக்குக் கூட்டணியின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டுசெல்லும் ஐ.நா. லொறிகளையும், ஆப்கன் - பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தானுக்குள் நுழையக் காத்திருக்கும் அகதிகளுக்கு பணம் மாற்றிக்கொடுப்பதற்காக அங்கு சிறிதாகத் தொழில் ஒன்றை ஆரம்பித்திருக்கும் பாகிஸ்தானியரொருவரையும் படங்களில் காணலாம்.

# பதவி கவிழ்க்க முயன்றால் கெரில்லாப் போர் வெடிக்கும்

## தலிபான் தலைவர் ஓமர் எச்சரிக்கை

காபூல்,ஒக்.2

"ஆப்கானிஸ்தானில் ஆட்சியில் இருக்கும் தலிபான்களை அகற்றி எனது ஆட்சியைக் கவிழ்க்க முயன்றால் நாட்டில் கெரில்லாப்போர் மூழும்."

- இவ்வாறு அமெரிக்காவையும் மேற்கு நாடுகளையும் எச்சரித்துள்ளார் தலிபான் தலைவர் முல்லா முகமட் ஓமர்.

ஆப்கானிஸ்தானில் ஆட்சிப் பொறுப்பில் இருந்து தலிபான்களை அகற்றிவிட்டு அந்த இடத்தில் முன்னாள் மன்னர் ஷாவின் தலைமையிலான ஆட்சியை மீண்டும் ஏற்படுத்த அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் பகீரத முயற்சி செய்து வருகின்றன.

இந்த முயற்சிக்கு ஆப்கானிஸ்தானின் வடக்கு எதிரணிக் கூட்டணியும் ஆதரவு தெரிவித்துள்ளது. இத்தாலியின் தலைநகர் ரோமில் கூடிய எதிரணிக் கூட்டணித் தலைவர்கள், மன்னர் சாஹீர் ஷாவை தமது தலைவராக ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்தனர்.

இதனையடுத்தே தற்போது முல்லா முகமட் ஓமரின் மேற்படி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமெரிக்கா எதிரணியுடன் கூட்டுச் சேர்ந்து சதி முயற்சி மூலம் தனது அரசைக் கவிழ்த்து விடக் கூடும் என்ற அச்சம் ஓமரின் அறிவித்தலில் தெரிவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானை நேரடியாகத் தாக்குவதைவிட இவ்வாறான வழிகளில் தலிபான்களையும் பின்லேடனையும் முதலில் ஓரங்கட்டிப் பின்னர் ஒழித்துக் கட்டுவதே அமெரிக்காவின் எண்ணம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ம)

### தலிபான்களுக்கு புதிய தளபதி

காபூல்,ஒக்.2

தலிபான் அமைப்பின் புதிய இராணுவத் தளபதியாக ஜலாலுதீன் ஹம்சானி அந்த அமைப்பின் தலைவரான முல்லா முகமட் ஓமரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

உலக அரங்கில்

ஓமரின் நெருங்கிய நண்பரான ஜலாலுதீன் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐயுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவர். சோவியத் யூனியனின் படைகள் ஆப்கானிஸ்தானுக்குள் இருந்த சமயம் அதனை எதிர்த்துப் போராடிய தளபதிகளில் முக்கியமானவராகவும் அவர் இருந்தார்.

அமெரிக்கா ஆப்கானிஸ்தான மீது தாக்குதல் நடத்தினால் அதனை எதிர்கொள்ளும் வகையில் தலிபான் படைகளைத் தயார்ப்படுத்தும் வகையிலேயே புதிய தளபதி நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-9)

### 'சிமி' உறுப்பினர் 500 பேர் கைது!

புதுடில்லி,ஒக்.2

இந்தியாவில் அண்மையில் தடை செய்யப்பட்ட முஸ்லிம் மாணவர் அமைப்பான 'சிமி'யைச் சேர்ந்த 500 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை -

இந்திய இஸ்லாமிய மாணவர் அமைப்பான 'சிமி' தேச விரோதச் செயல்களில் ஈடுபட்டதாலேயே அதனைத் தடை செய்ய வேண்டி ஏற்பட்டது என்றும் -

இதனை எவரும் அரசியலாக்கக் கூடாது என்றும் -

இந்திய உள்துறை அமைச்சர், எல்.கே.அத்வானி தெரிவித்துள்ளார். (ம-9)

### பேச்சு நடத்த வருமாறு விடுத்த

## தலிபானின் அழைப்பை அமெரிக்கா நிராகரித்தது

வாஷிங்ரன்,ஒக்.2

பின்லேடன் விவகாரம் குறித்துப் பேசுவதற்காக அமெரிக்க மனித உரிமைகள் குழுத் தலைவர் தலைமையிலான குழு ஒன்றை அனுப்புமாறு தலிபான்கள் விடுத்த நிபந்தனையுடன் கூடிய அழைப்பை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

வெள்ளைமாளிகையின் பிரதான அதிகாரியான அன்ட்ரு போர்ட் தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

"தலிபான் அரசு என்ன செய்ய வேண்டும் என்பதை அமெரிக்கா தெளிவாகக் கூறிவிட்டது. பின்லேடனை மட்டுமல்ல அவரது 'அல்கெய்தா' அமைப்பு உறுப்பினர்களையும் ஒப்படைக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ் மிகத் தெளிவாக ஏற்கனவே கூறிவிட்டார். எனவே இது குறித்து தலிபான்களுடன் பேச இனி எதுவுமில்லை"

- என்று அவர் மேலும் சொன்னார்.

இதேவேளை -

அமெரிக்காவில் மீண்டும் தீவிரவாதத் தாக்குதல் இடம்பெறக் கூடும் என்று அந்த நாட்டின் சட்டமா அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனை அடுத்து மீண்டும் தாக்குதல் நடந்தால் அதனை எதிர்கொள்ள அமெரிக்கா தயாராகி வருகிறது. (ம-9)

## பின்லேடன் இன்னமும் தலிபான் கட்டுப்பாட்டில்

இஸ்லாமாபாத்,ஒக்.2

அமெரிக்காவால் தேடப்பட்டு வரும் ஒஸாமா பின்லேடன் இன்னும் தமது கட்டுப்பாட்டின் கீழேயே இருப்பதாகவும் -

அவரது பாதுகாப்புக் கருதி அவர் இரகசிய இடம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் - தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

பாகிஸ்தானுக்கான தலிபான் தூதர் அப்துல் சலாம் இத்தகவலை இஸ்லாமாபாத்தில் வெளியிட்டார்.

தலிபான்களின் இந்த அறிவிப்புக் குறித்து அமெரிக்கா ஐயம் வெளியிட்டுள்ளது.

ஒஸாமா பின்லேடன் இன்னும் தமது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றார் என்று கூறுவதை நம்பும்படியாக இல்லை என்று அமெரிக்க வெளியுறவுத்துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பின்லேடனைப் பாதுகாப்பதற்காகவும் அவரது இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இருக்கும் அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகளின் நடவடிக்கைகளைத் திசைதிருப்பும் நோக்கத்துடனும் தலிபான்கள் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

### அமெரிக்காவுக்கு ஆதரவளித்ததால்

## சூடான் மீதான தடைகளை ஐ.நா.விலக்கிக் கொண்டது

ஆபிரிக்க நாடான சூடான் மீது விதித்திருந்த பொருளாதாரத் தடைகளை ஐ.நா. விலக்கிக்கொண்டுள்ளது.

சர்வதேசப் பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா மேற்கொள்ளவுள்ள போருக்கு ஆதரவளிக்க சூடான் முன்வந்ததையடுத்தே அதன் மீதான தடைகளை விலக்க ஐ.நா. தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

எகிப்திய அதிபர் கொஸ்னி முபாரக் மீதான கொலை முயற்சியில் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களை கைது செய்து ஒப்படைக்க சூடான் மறுத்ததையடுத்து, 1996ஆம் ஆண்டு சூடான் மீது ஐ.நா. பொருளாதாரத் தடைகளை விதித்தது.

கென்யா, தன்சானியா ஆகிய நாடுகளில் இருந்த அமெரிக்கத் தூதரகங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளை ஒஸாமா பின்லேடன் சூடானில் தங்கியிருந்தே செயற்படுத்தியதாக அமெரிக்கா அப்போது குற்றஞ்சாட்டியது குறிப்பிடத்தக்கது.

## அரபு லீக்கின் மாநாடு 10ஆம் திகதி கூடுகிறது

### ஆப்கன் - அமெரிக்க நிலைகள் குறித்து ஆராய

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா பழிவாங்கும் தாக்குதல் ஒன்றை நடத்தக்கூடும் என்ற ஏதுநிலை இருப்பதனால், அது குறித்துப் பேசுவதற்காக இஸ்லாமிய நாடுகளின் மாநாடு அவசரமாக இம்மாதம் 10ஆம் திகதி கூடவுள்ளது.

இந்த மாநாடு நடைபெறுவதற்கு முதல் நாளான 9ஆம் திகதி அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள சந்தித்து இது குறித்துப் பேசுவார்கள் என்று அரவு லீக்கின் செயலர் அமர்முக்தா கூறினார்.

அமெரிக்கா தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரும் ஒஸாமா பின்லேடனை தலிபான்கள் ஒப்படைக்க மறுத்து வருவதை அடுத்து ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா எந்தநேரமும் தாக்குதலை ஆரம்பிக்கக்கூடும் என்றநிலை தற்போதுள்ளது.

இந்த நிலையில் முஸ்லிம் நாடு என்ற வகையில் தலிபான்களுக்கு ஆதரவளிப்பதா? அல்லது உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று அமெரிக்கா கூறிக்கொளளும் நடவடிக்கையை ஆதரிப்பதா? என்ற குழப்ப நிலையில் அமெரிக்க சார்பு அரபு நாடுகள் சிக்கி உள்ளன.

இதனாலேயே அரபு லீக்கின் இந்த மாநாடு அவசர அவசரமாகக் கூட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-9)

## பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் பங்களாதேஷில் நேற்று வாக்களிப்பு

டாக்கா,ஒக்.2

பங்களாதேஷில் நாடாளுமன்றத்துக்கான 8 ஆவது தேர்தல் வாக்களிப்பு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று நடைபெற்றன.

இந்தத் தேர்தல்களையொட்டி வன்முறைகள் அதிகளவில் இடம் பெற்றதால் நேற்று வாக்களிப்பு நடைபெற்ற சமயம் நாடுமுழுவதும் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

299 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நேற்று நடந்த தேர்தலில் ஆயிரத்து 900 க்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 7 கோடி ஐம்பது லட்சம் மக்கள் வாக்களிக்க அனுமதி பெற்றிருந்தனர்.

இந்தத் தேர்தலில் ஷேக் ஹஸீனாவின் அவாமி லீக் கட்சிக்கும் பேகம் காலிதா ஸியா தலைமையிலான பங்களாதேஷ் தேசியக் கட்சிக்கும் இடையே முக்கிய போட்டி உள்ளது.

முன்னாள் இராணுவ ஆட்சியாளர் எச்.எம்.எர்ஷாத்தும் பல தொகுதிகளில் தனது ஆதரவாளர்களைப் போட்டியிட வைத்துள்ளார்.

கடந்த இரு பொதுத் தேர்தல்களிலும் எந்தக் கட்சிக்கும் பெரும் பான்மைப் பலம் கிடைக்கவில்லை. இந்தத் தேர்தலிலும் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மைப் பலம் கிடைக்காது என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல்களை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாக ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

## நேருக்கு நேர் பார்த்துப் பேசும் நவீன 'மொபைல்' தொலைபேசி

### நேற்று ஜப்பானில் அறிமுகம்

டோக்கியோ,ஒக்.2

ஜப்பானின் முன்னணித் தொலைபேசி நிறுவனம் ஒன்று உலகின் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த முதலாவது நவீன 'மொபைல்' தொலைபேசியை நேற்று அறிமுகம் செய்துவைத்தது.



அறிமுகப்படுத்தப்பட்ட 'மொபைல்' தொலைபேசி இதுதான்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று இடங்களில் 'கீஜி தசிஹறாவா' என்ற இந்த வகைத் தொலைபேசிகள் என்.ரி.ரி. டுகோமோ நிறுவனத்தால் சேவைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தத் தொலைபேசியைப் பயன்படுத்துபவர்கள் அதன்மூலம் 'இன்ரநெற்' தொடர்புகளை ஏற்படுத்தி தொலைபேசியிலேயே இணையப் பக்கங்களைப் பார்வையிட முடியும்.

இதேவகைத் தொலைபேசியை வைத்திருக்கும் இருவர் அத் தொலைபேசிகளில் எதிர்முனையில் பேசுபவரின் முகத்தைப் பார்க்க முடியும். படங்களைப் பார்க்கவும், சங்கீத இசையைக் கேட்கவும் இந்தத் தொலைபேசிகளில் வசிகள் உண்டு.

மேலதிக கட்டணம் செலுத்தினால் இத்தொலைபேசியைக் கொண்டே புகைப்படம் எடுக்கும் வசதியையும் அதில் பொருத்திக் கொள்ளலாம்.

இத்தொலைபேசி சேவைக்கு 'பிறீடம் ஓவ் மொபைல் மல்ரி மீடியா அக்ஸஸ்' (Freedom of Mobile Muliti-media Access) என்று பெயரிடப்பட்டுள்ளது. முதலில் டோக்கியோ நகரில் இருந்து 30 கிலோ மீற்றர் தொலைவு வரையே இத்தொலைபேசியின் அலைவரிசைகள் இயங்கக்கூடிய வகையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டளவில் இத்தொலைபேசி அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகம் செய்யப்படும். இந்த வகைத் தொலைபேசி ஒன்றின் விலை 560 அமெரிக்க டொலர்களாகும். அதனுடன் படமெடுப்பதற்கான கமெரா பொருத்தப்பட்டால் 800 டொலர்களாகும். (ம)

# விசாரணைக்காக இளைஞரை ஒப்படைக்க நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 2

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர் ஒருவரை விசாரணைகளுக்காக காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பொலிஸாரிடம் கையளிக்க சிறைச்சாலை நிர்வாகத்துக்கு யாழ் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த மே மாதத்திலிருந்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணம் அன்னசத்திர லேனைச் சேர்ந்த சண்முகநாதன் குமணன் என்ற இளைஞரை 3 நாள்களுக்கு விசாரணை செய்வதற்குத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று காங்கேசன்துறை பொலிஸார் [illegible] டுக்கொண்டதற்கிணங்க யாழ். நீதிமன்ற நீதிவான் இ. த. விக்னராஜா நேற்று இந்த அனுமதியை வழங்கினார். (ஐ-10-ரி)

# ஊழியர்கள் பற்றாக்குறையினால் மாநகரசபைப் பணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ். மாநகர சபையில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுவதனால் பல வேறு வேலைத் திட்டங்களையும் விரைவாகச் செயற்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் இ. இராமலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் —

எமது வேலைத் திட்டங்களை வினைத்திறனுடன் செய்து முடிப்பதில் ஊழியர் பற்றாக்குறை பெருந்த இடைஞ்சலாக உள்ளது. சுமார் 20க்கும் மேற்பட்ட எழுதுநர்கள் இன்னும் எமக்குத் தேவையாக உள்ளனர். இதுவரை காலமும் பணியாற்றிய கணக்காளரும் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார். இதனால் இப்பணிகளை வேறு அலுவலர்களே மேலதிக கடமையாகச் செய்து வருகின்றனர் — என்றார். (ஐ-9)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஒக். 2

யாழ்ப்பாணம் வலக் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே ஆரம்பமாகியுள்ள உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

மத்தியகல்லூரி எதிர் புனித ஜேம்ஸ் ம. வி.

புனித சாள்ஸ் ம. வி. எதிர் வைத்தீஸ்வராக் கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை எதிர் புனித ஜோசப் வித்தியாலயம்.

புனித சாள்ஸ் ம. வி. எதிர் மத்திய கல்லூரி. (க-86)

★ ★ ★

யாழ்ப்பாண வலய கோப்பாய் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

உரும்பிராய் இந்துக்கல்லூரி எதிர் கோப்பாய் ம. வி.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்

### 18 வயதுப் பிரிவு

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் புத்தூர் புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம்.

ஊரெழுகணேசா எதிர் அத்தியார் இந்து. (க-86)

★ ★ ★

வலிகாமம்வலய சங்கானை கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

### 18 வயதுப் பிரிவு

அராலி இந்துக்கல்லூரி எதிர் சங்கானை சிவப்பிரகாச ம. வி.

அராலி சரஸ்வதி ம. வி. எதிர் மூளாய் சைவப்பிரகாச ம. வி.

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

காலை 8.15 மணிக்கு 14 வயதிற்கு உட்பட்டோருக்கான கால் இறுதி ஆட்டம் இடம்பெறவுள்ளது. (க-86)

★ ★ ★

வலிகாமம் வலய தெல்லிப்பளை கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 16, 18 வயதிற்கு உட்பட்டோர்களுக்கான மூன்றாம் இடத்திற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன. (க-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் வலய நல்லூர் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிமைதானத்தில் 18 வயதிற்கு உட்பட்டோருக்கான அரையிறுதி ஆட்டங்களும், 16 வயதிற்கு உட்பட்டோருக்கான மூன்றாம் இடத்திற்கான ஆட்டமும் இடம்பெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ அரையிறுதி ஆட்டங்கள் — 18 வயதுப் பிரிவு — யாழ். இந்து எதிர் பெரியபுலம் ம. வி., கனகரத்தினம் ம. வி. எதிர் கொக்குவில் இந்து.

★ மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் — 16 வயதுப் பிரிவு — பெரியபுலம் ம. வி. எதிர் கனகரத்தினம் ம. வி. (க-86)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ ஹாட்லிக்கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி (ஹாட்லி மைதானம்)

★ யாழ். இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி (யாழ். இந்துமைதானம்)

★ சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை (சென். ஜோன்ஸ்மைதானம்)

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி (யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்) (ஜ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக் 2

யாழ். செயலக நலன்புரிக் கழகத்தால் திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ காலை 8.30 மணி — தீவக வலயக் கல்வி அலுவலக அணி எதிர் யாழ். மாநகர சபை அணி, தேசிய சேமிப்பு வங்கி அணி எதிர் கல்வியியற் கல்லூரி அணி.

★ காலை 11.30 மணி — மாவட்டச் செயலக அணி எதிர் சமூகசேவைகள் திணைக்கள அணி. யாழ். பல்கலைக்கழக ஊழியர் எதிர் மக்கள் வங்கி அணி.

★ பிற்பகல் 3 மணி — சிமெந்துக் கூட்டுத்தாபன அணி எதிர் யாழ். வலயக் கல்வி அலுவலக அணி. (-3)

# வயோதிபர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 2

காற்றின் வேகத்தில் சரிந்து விழுந்த மதிலின் இடிபாடுகளுக்குள் சிக்குண்டு வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மானிப்பாய், புதுமடம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சாமுவேல் ஜேம்ஸ் (வயது 80) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

ஷெல் தாக்குதல்களின் அதிர்வினால் வெடித்துக் காணப்பட்ட இம் மதிலின் அருகில் இளைப்பாறுவதற்காக நின்ற சமயமே மதில் திடீரெனச் சரிந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை —

டிராக்டரில் ஏற்றிய கல் உருண்டுவந்து வீழ்ந்ததால் கல் ஏற்றிய ஒருவர் கை முறிந்து காயமடைந்தார்.

சிறுப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் நல்லான் சிவபாதலிங்கம் (வயது 36) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (க-15)

# பிரார்த்தனை

நாட்டில் அமைதி வேண்டி கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசாமி ஆலயத்தில் இன்று காலை 8 மணி முதல் பிரார்த்தனை இடம்பெறவுள்ளது (ஐ-90)

# குருபூசை

யாழ்ப்பாணம், ஒக். 2

ஸ்ரீலஸ்ரீ மௌன குரு கடவுள் சுவாமிகளின் 22 ஆவது மகாசமாதி குருபூசை இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் கொண்டாடப்படவுள்ளது.

பூஜைகள், ஆராதனைகள் பஜனை, சொற்பொழிவுகள் இடம்பெறும். (ஐ-3)


## வட இலங்கை சங்கீத சபை
## பரீட்சைகள் 2002

வட இலங்கை சங்கீத சபையின் 2002 ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 2001 - 10 - 05 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவு திகதி 2001 - 12 - 10. விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தற் பிரதியுடன் ரூபா 20.00.

விண்ணப்பப் படிவத்தைத் தபால் மூலம் பெற விரும்பும் தேர்வுநாடிகள் ரூபா 20.00 பெறுமதியான அஞ்சற் கட்டளை (Money Order) உடன் ரூபா 3.50 பெறுமதியான தபாற்தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10 செ.மீ. 22 செ.மீ.) கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்,

**வட இலங்கை சங்கீத சபை,**
**கல்வித் திணைக்களம்,**
செம்மணி வீதி, யாழ்ப்பாணம்

எனும் இடத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**வட இலங்கை சங்கீத சபை,**
**யாழ். கல்வித் திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி/18482)



## கூறுவிலை கோரல்

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையிலுள்ள ZISULU வகை DOUBLE CAB PICK - UP இற்குரிய திருத்த வேலைகளுக்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| மீளளிக்கக்கூடிய பிணை வைப்புப் பணம் | — 500.00 |
| விண்ணப்பப் படிவப் பணம் | — 50.00 |

மேற்குறித்த தொகையினைப் பணிமனையில் செலுத்திக் கூறுவிலை விண்ணப்பத்தினை சீல்வைத்த உறையில் இட்டு 10-10-2001 ஆம் திகதிக்கு முன்னதாக இப் பணிமனைக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப்படிவத்தை 09-10-2001 பிற்பகல் 03.00 மணிவரை பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்வதுடன் வாகனத்தினையும் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி உ. **சிவபாதசுந்தரம்,**
மாகாண பிரதிப் பணிப்பாளர்.
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி/18477)



## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்,
''வேளாங்கண்ணி ஸ்ரோர்ஸ்'' உரிமையாளருமாகிய,

**சவிரிமுத்து பிறவுண் கிறிஸ்ரியன்**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று நாம் துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆத்மா சாந்தி அடைவதாக!

**— யாழ்ப்பாணம் வணிகர் கழகம்**

இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி/18480)



## கண்ணீர் அஞ்சலி

எமது சிரேஷ்ட ஆசிரியையான
திருமதி சரோஜினி நாகமணி
அவர்களின் அன்புக் கணவர்

**ச. நாகமணி**

அவர்கள் 30-09-2001 ஞாயிறன்று காலமானதை இட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**யா/ ஆனைக்கோட்டை**
**அ.மி.த.க. பாடசாலை, ஆனைக்கோட்டை.**
(92872)

உதயன்

## யார் பணி இது?

யாழ். மாவட்டத்தில் கோட்ட, வலய, மாவட்டமட்டப் போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியீட்டும் மாண வர்கள் மாகாண, தேசிய ரீதியில் பங்கு பற்றுவதில் உள்ள இடர்பாடுகள் குறித்து பெற்றோர் ஒருவர் விவரமாகப் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

வலய மட்டப் போட்டிகளை நடத்தி விட்டு தமது கடமை முடிந்து விட்டது போல வலயக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களும், மாகாணக் கல்விப் பணிப்பாளரும் அசமந்தப் போக்கோடு இருந்து விடுவதாகவும் -

வெற்றி பெற்ற மாணவர்கள் மாகாண, தேசிய மட்டப் போட்டிகளுக்குப் போவதானால் அதற்குரிய ஒழுங்குகளை சம்பந்தப்பட்ட மாணவரின் பெற்றோர்களும் அதிபர்களுமே செய்துகொள்ளட்டும் என்ற ரீதியில் இந்த அதிகாரிகள் ஒதுங்கியிருப்பதாகவும் -

பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்; விசனம் தெரிவிக்கின்றனர்.

நடந்து முடிந்த தமிழ்த் தினப் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளிலும், இனி நடக்கப் போகும் ஆங்கில தினப்போட்டியிலும் இதே நிலைமைதான் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

1996 இற்குப் பிறகு - யாழ்.குடா நாடு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் - பல ஆண்டுகள் யாழ். மாணவர்கள் கோட்ட, வலய மட்டப் போட்டிகளுக்கு அப்பால் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வாய்ப்புக் கிடைக்கவில்லை. வலயங்கள் இணைந்து மாவட்ட மட்டப் போட்டிகளைக் கூட நடத்தாமல் ஒதுங்கியிருந்தன. பின்னர் மாவட்ட மட்டப் போட்டிகள் நடத்தப்பட்டாலும், அதற்கு அப்பால் மாகாண, தேசிய ரீதியில் நடைபெறும் தமிழ்த்தின, ஆங்கிலதின, விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

திருகோணமலைக்கோ பிற இடங்களுக்கோ பயணம் செய்வதற்கு போதிய வசதி இல்லை என்ற காரணத்தைக் காட்டி யாழ். மாவட்ட மாணவர்களை 'குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும் நிலையில' விட்டு விட்டார்கள் அதிகாரிகள்.

எனினும் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, தமிழ் விவகார அமைச்சு உருவாக்கப்பட்ட பின்னர் இத்தகைய மாணவர்களுக்கு விமானம் மூலமும் கப்பல் மூலமும் பிற இடங்களுக்குச் செல்வதற்கான பயண வசதி, சென்ற இடங்களில் தங்கியிருப்பதற்கான வசதி, உணவு வசதி போன்றவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. அத்தோடு அப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் மற்றும் அதிகாரிகள் வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதியும் ஒட்டுமொத்தமாக - வழங்கப் படுகின்றது. அதிலும் பெரும் கெடுபிடி காட்டப்படுவதாக இல்லை.

என்றாலும் மாணவர்கள் வெளியிடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் தொடர்ந்து இழுபறி நிலையே காணப் படுகின்றது.

நினைத்த நினைத்தவுடன் அதிகாரிகள் வெளியிடங்களுக்கு பறந்தோ, கப்பலிலோ சென்று திரும்புகிறார்கள். ஆனால் மாணவர்களை - மாணவர் அணிகளை - அனுப்புவதில்தான் சிக்கல்.

தங்களுக்கிடையிலான அதிகாரம் குறித்து முட்டிமோதி, சீண்டு பிடிக்கும் அதிகாரிகள், இந்தப் பொறுப்பை ஏற்றுச் செயற்படுவதில் மட்டும் பின்னிற்கின்றார்கள்.

இத்தகைய விடயங்களில் பொறுப்பு இன்னாருடையது என்பது திட்டவட்டமாக ஒப்படைக்கப்பட வேண்டும். இவ்விடயம் குறித்து விசாரணை நடத்தி, இதுவரை காலமும் பொறுப்பற்றதனமாகச் செயற்பட்ட அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டு கண்டிக்கப்பட வேண்டும்.

இவ்விடயத்தில் சில கல்லூரி அதிபர்கள், முந்திரிக்கொட்டை போல் முன்னின்று செயற்பட்டு, அதிகாரிகளின கடமைகளைத் தாங்கள் செய்ய முற்பட்டு - பொறுப்பு இவரிடமும் இல்லை அவரிடமும் இல்லை என்ற நிலையை உருவாக்காமல், அதிகாரிகளின் பணியை அதிகாரிகளைக் கொண்டே செய்விக்க வேண்டும். அப்படியில்லாமல் இது விடயத்தில் ஓரிரு அதிபர்கள் தங்கள் தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தித் தங்கள் பாடசாலை மாணவரின் விடயங்களைத் தாங்கள் நிறைவேற்றிக் கொள்வதால் ஏனைய - செல்வாக்கற்ற - அதிபர்கள் அல்லற்படவேண்டியுள்ளது.

அத்தோடு அதிபர்கள் சங்கமும் மாணவர் நலன்கருதி இது விடயத்தில் உதவப்போக, இந்தப் பணி அதிபர்கள் சங்கத்தினுடையது என்பது போன்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே அதிபர் சங்கமும் ஒது கி நின்று உரியவர்கள் உரிய பணியைச் செய்ய வைக்க வேண்டும்; அனுமதிக்க வேண்டும்.

# ஜி.எல்.பீரிஸ் வழங்கிய இரவு விருந்தில் ரணில்!

கொழும்பு,ஒக்.2

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் அதிருப்திக் குழுவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கடந்த வியாழன் இரவு நடத்திய விருந்தின் பின்பே அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐ.தே.கட்சி சமர்ப்பிக்க முடிவு செய்தது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பேராசிரியர் பீரிஸ் வழங்கிய இரவு விருந்தில் ரணில் விக்கிரமசிங்க, எஸ்.பி.திஸநாயக்க, மிலிந்த மொரகொட ஆகியோர் பங்குபற்றினர் என்றும் -

நம்பிக்கையில்லாப் பிரரேணை குறித்து அங்கு இறுதி முடிவு எடுக்கப்பட்டது என்றும் -

பீரிஸ், திஸநாயக்க ஆகியோரின 'ஆசீர்வாதத்'துடன் பிரேரணை மறுநாள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் - தகவல்கள் வெளியாகியுள்ளன. (க-3)

### சில தமிழ்க்கட்சிகளை இணைத்து

# 'ஒற்றுமை முன்னணி' ஒன்றை அமைக்க ரெலோ முயற்சி!

கொழும்பு,ஒக்.2

சில தமிழ்க்கட்சிகளை உள்ளடக்கி 'ஒற்றுமை முன்னணி' ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் ரெலோ அமைப்பு ஈடுபட்டுள்ளதாக அந்தக் கட்சியின் முதல்வர் என்.சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) ஆகியவற்றை ஒன்றிணைத்து 'ஒற்றுமை முன்னணி'யை அமைப்பதற்கு முயற்சித்து வருவதாகவும் - இது விடயம் குறித்து இந்த வாரம் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் பேச்சுக்களை நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிக்கு அனுசரணையாகச் செயற்படுவதற்கு ஜனநாயக ரீதியில் 'ஒற்றுமை முன்னணி' அவசியம் என்பதை உணர்ந்து நாம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார். (ஐ-9)



ஊர்காவற்றுறை உப்புக்குள வீதியில் 2 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ள முன்பள்ளி நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜா அடிக்கல் நடுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)*

### யேமனிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட

# 116 பேரில் ஐவர் மட்டும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை

கொழும்பு,ஒக்.2

யேமன் நாட்டிலிருந்து கடந்த சனியன்று கொழும்புக்குத் திருப்பியனுப்பப்பட்ட 116 பேரில் 5 பேர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

116 பேரில் 36 பேர் தமிழர்கள், ஏனையோர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் -

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐந்து பேரைத் தவிர ஏனையோர் தீவிர விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் - கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (க-7)

### கோப்பாய்த் தரவையை அண்டிய வயல்களில் இம்முறை நெற்செய்கை

கோப்பாய்,ஒக்.2

அண்மையில் பெய்த பெரும் மழையைத் தொடர்ந்து கோப்பாய் தரவையை அண்டிய வயல் பகுதியில் இம்முறை காலபோகச் செய்கைக்கான முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வருடம் இப்பிரதேசங்களில் நிலவிய அசாதாரண சூழலால் காலபோக செய்கை நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-72)

### நாளை

புரட்டாதி 17
புதன்கிழமை
திதி: பிரதமை
முன்னிரவு 8.57 வரை.
நட்சத்திரம் : ரேவதி
நள்ளிரவு 12.27 வரை
சுபநேரம்: 4.32 - 6.02
ராகுகாலம் : 7.02 - 1.32
(பழைய நேரப்படி)

### சென்.பற்றிக்ஸில் கணனிக் கூடம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் கடந்த 21ஆம் திகதி இடைநிலை மாணவர்களுக்கான கணனிக் கூடமொன்று கல்லூரியின முகாமையாளரான யாழ்.ஆயர் பேரருட்திரு.தோமஸ் சவுந்தரநாயகத்தால் திறந்துவைக்கப்பட்டதுடன் கணனிக் கற்கைநெறியும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஆயர், கணனி அறிவை இடைநிலைப் பிரிவு மாணவரிடத்தில் இருந்து அறிமுகப்படுத்தி அவர்கள் கணனி தொடர்பான அறிவைப்பெற்றுக்கொள்வதற்கு இக்கணனிக்கூடம் பெரிதும் உதவியாக அமையும் என்று கூறினார். (க-ரி)

### உதயவாக்கு

ஒருவன் எல்லோரது தவறையும் மன்னித்துவிடவேண்டும் தன் தவறைத் தவிர்த்து.

## நாட்டு நடப்பு

எழில் தவழ் நங்கையாக
இருந்தனள் நேற்று இங்கு
குளிர் மிகு லண்டனுக்கு
கூட்டியே மணாளன் சென்றான்
முதுகினில் தவழ்ந்த கூந்தல்
முழுதுமாய் வெட்டி விட்டான்
மதுவினில் திளைப்பான் அண்டை
மந்திபோல் நின்ற பாவை
இது படமென அனுப்பி வைக்க
இதயம் வெடித்து மாண்டான் தந்தை.

*- விகடகவி.*

# தற்கொலை அங்கியின் கைரேகை புலனாய்வுக் குழுவால் சோதனை

கொழும்பு,ஒக்.2

கொழும்பு, விகாரமாதேவி பூங்கா சுற்றாடல் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலை அங்கியில் பதிந்துள்ள கைரேகை அடையாளங்களைப் பொலீஸார் நுணுக்கமாகப் பரிசோதித்து வருகின்றனர்.

இதேவேளை, கறுவாக்காட்டுப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ள 6 தமிழர்களையும் பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பொலீஸ் குழுவினர் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் நான்கு இளைஞர்களும் இரண்டு யுவதிகளும் அடங்குவர் என்றும் -

அவர்களில் 3 இளைஞர்களும், ஒரு யுவதியும் கிழக்குப் பகுதியையும் ஓர் இளைஞரும் யுவதியும் வடக்கையும் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

### பெற்றோர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தரம் 12 (2003 பிரிவு) மாணவர்களின் பெற்றோர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பி.ப. 2.45 மணிக்குக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். பெற்றோர்கள் வருகைதந்து தங்கள் பிள்ளைகளின் முதலாந்தவணைப் பரீட்சைப் புள்ளிகளைப் பார்வையிட்டு கையொப்பம் இட்டுச் செல்லுமாறு அதிபர் அறிவித்துள்ளார்.(ஐ)

### பின்லேடனின் சகா வந்ததாக வெளியான தகவல்:

# சி.ஐ.ஏ. அதிகாரிகள் குழுவினர் கொழும்புக்கு வந்து விசாரணை

கொழும்பு ஒக்.2

சர்வதேசப் பயங்கரவாதியென வர்ணிக்கப்படும் ஒஸாமா பின்லேடனின் மிக நெருங்கிய நண்பரொருவர் கொழும்புக்கு வந்துள்ளதாகக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து -

அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பிரிவைச் (சி.ஐ.ஏ.) சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று கடந்தவாரம் கொழும்பு வந்து விசாரணை மேற்கொண்டதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

பின்லேடனின் இந்த நெருங்கிய நண்பரான ஹாஜிமலீக் என்பவரே இலங்கை வந்துள்ளதாகக் கூறப்பட்டது.

இதேவேளை -

ஹாஜிமலீக்கின் கொழும்பு வருகையையடுத்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பாதுகாப்புத் தீவிரப் படுத்தப்பட்டு, விமானப் பயணிகளும், கடவுச்சீட்டுக்களும் மிகக் கடுமையாகச் சோதனையிடப்பட்டன என்றும் -

எனினும் இந்தச் சோதனைகளையடுத்து ஹாஜிமலீக் கொழும்பு வராதது உறுதிப்படுத்தப்பட்டது என்றும் - பின்னர் அறிவிக்கப்பட்டதாகக் கொழும்புச் செய்தி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருந்தது. (க-7)

### கருத்துரை

யாழ்ப்பாணம்,ஒக்.2

திருநெல்வேலியிலுள்ள பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் - சமூக விஞ்ஞானப் படிப்புவட்டத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு "அமெரிக்கா மீதான தாக்குதல் - உலகச்சூழ்நிலை" என்ற தலைப்பிலான ஆய்வுக்களம் இடம்பெறவுள்ளது.

அரசியல் - பொருளாதாரம் எனும் தலைப்பில் அரசியல் விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கமும், இராணுவதந்திரோபாயம் என்னும் தலைப்பில் ஏ.எஸ்.உதயகுமாரும் கருத்துரை ஆற்றவுள்ளனர். (க-ரி)

### முழுநிலாநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் முழுநிலாநாள் கருத்தரங்கு இடம்பெறும்.

"அமெரிக்காவில் அண்மையில் நிகழ்ந்த தாக்குதலும் அதனால் சர்வதேச ரீதியில் ஏற்பட்ட தாக்கங்களும்" என்ற விடயம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை கருத்துரை வழங்கவுள்ளார். (க-ரி)

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



பாதையோரம் கிடக்கும்
பார்வையைக் கவர்ந்திழுக்கும்
அப்பாவி நீயும் ஆசையுடன்
அதனை எடுக்கப் போனால்
வெடித்துச் சிதறிவிடும்
விபரீதம் ஆகிவிடும் கவனம்!

# முக்கனிகளின் ஒன்றான வாழைச்செய்கை குடாநாட்டில் நலிவடைந்து செல்வதேன்?

**வாழை** மிக ஆதியான - ஆசிய கண்டத்திற்குரிய - மனிதனுடன் நீண்ட காலத் தொடர்புடைய பயிராகும்.

இது அயனமண்டலத்திற்குரிய பழமாக அமைவதுடன் சர்வதேச வர்த்தகத்தில் மிக முக்கிய இடத்தைக் கொண்டுள்ளது. உலக உற்பத்தியில 59 வீதம் ஆபிரிக்காக் கண்டத்திலும் 25 வீதம் ஆசிய, அமெரிக்கக் கண்டத்திலும் மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் உலக சந்தைக்கு மத்திய, தென் அமெரிக்க நாடுகளே அதிகளவு பங்களிப்பைச் செய்கின்றன. பிரேசிலுக்கு அடுத்ததாக இந்தியாவே உலகின் இரண்டாவது உற்பத்தி செய்யும நாடாகும்.

இலங்கையில் யாழ்ப்பாணமும் வாழைச் செய்கைக்கு ஏற்ற கால நிலை, மண்வளம் ஆகியவற்றைக் கொண்டுள்ளதுடன், இலங்கையின் பெருமளவு தேவையையும் பூர்த்தி செய்து வந்துள்ளது. 2000 ஆண்டில் 280.5 ஹெக்டேயரில் வாழை பயிர் செய்யப்பட்டுள்ளது. வாழைப் பயிர்ச் செய்கை பல சவால்களை எதிர் கொண்டே செயற்பட்டு வருகின்றது. இவை குறித்து முக்கிய விடயங்களை ஆராய்வதே நமது நோக்கமாகும்.

**மிக முக்கிய சவால்களாவன:**

★ முக்கிய சில இனங்கள் வேகமாக இல்லாமற் போகும் நிலை ஒன்று காணப்படுகிறது. மருத்துவ வாழை, செவ்வாழை, நேத்திரன், பன்றி வாழை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

★ வாழை வேகமாக வைரசுத் தாக்கத்தால் அழிந்து அல்லது அவற்றின உற்பத்தித்திறன் பாதிக்கப்படுகின்றது.

★ வேறு பல நோய்களின் தாக்கங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. (சிகரோக்கா இலைப் புள்ளி)

★ மிக வேகமாக அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு.

★ புதிய அணுகுமுறைகள் இல்லை.

★ ஏற்றுமதி வாய்ப்புகள் இல்லை.

★ பொதி செய்தல், பெறுமதி கூட்டல் (VALUE ADDITION) ஆகியன குறித்த தொழில்நுட்பம் இல்லாதநிலை.

இவ்வாறான பல சவால்களுக்கு மத்தியிலும் வாழைச் செய்கையாளர்கள் தம்மால் முடிந்த அளவு உற்பத்தியை மேற்கொண்டு மாவட்ட மக்களின் போசாக்குச் செயற்பாட்டிற்கு உதவிபுரிந்து வருதல் பாராட்டிற்கு உரியதே.

அறுவடைக்கு முன்னும் அறுவடையின் போதும் நோக்க வேண்டியவை:-

1. நீர், உர பாவனையை மட்டுப் படுத்துவதுடன் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ளல்.

2. அறுவடை செய்யப்பட்டால் உரியமுறையில் பேணப்பட்டு சந்தைக்கு எடுத்துச்செல்லப்படவேண்டும்.

3. குலை, சீப்புகள் உரிய முதிர்ச்சியுடன், காயங்கள், சிரங்கிய நிலை இல்லாது பழத்திலுள்ள தலை மற்றும் தோல்விகிதம் (PULP SKIN RATIO) உரிய விகிதத்திலும் வெல்ல அளவு பரிந்துரை செய்யப்பட்ட அளவிலும் இருந்தாலே அவை தென் பகுதிச் சந்தைகளில் நேரடியாகச் சந்தைபபடுத்தப்பட முடிவதுடன் ஓரளவு இலாபமும் பெறமுடியும்.

குலைகளை வெட்டி நீண்ட நேரம் வெயிலில் விடல், மண்ணுடன் தொடர்பாக இருக்கவிடல், சைக்கிள்களில் எடுத்துச்செல்லல் போன்ற பல நடைமுறைகள் தரத்தினைப் பாதிக்கச் செய்கின்றன.

வாழை ஏற்றுமதியில் இன்று உலக நாடுகள் பல முன்னேறிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன. ஆனால் அவற்றின் ஆரம்ப மூலதனம், இந்த அளவிற்கு உற்பத்தி, தொடர்ந்து போக்குவரத்து என்பன இங்கு சாத்தியமாக இருக்குமா என்பதைப் பொறுத்து இவ்வாறான நவீன தொழில்நுட்பங்களைப் பற்றிச் சிந்திக்க முடியும்.

இன்றைய சூழ்நிலைகளில் தென் பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்வதாயின சில எளிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, இங்கிருந்து திரும்பிச் செல்லும் கப்பல் வசதிகளையும் பயன்படுத்தி தென்பகுதி சந்தைகளில் ஒரு மீள் வரவின் (RE ENTRY) பின்பே ஒரு திட்டத்தின் அடிப்படையில் செயற்பாடு முன்னெடுக்கப்பட முடியும்.

இதனைப் பரீட்சார்த்த ரீதியில் யாழ்மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் கூட்டுறவுச் சமாசமோ அல்லது விவசாய அபிவிருத்தித் திணைக்களமோ அரச அதிபருடன்



இணைந்து செயற்பட்டாலே முன்னுதாரணமாகச் செயற்பட்டுப் பின்னர் விரிவு படுத்தப்பட முடியும். இதில் சில தனியார் ஆர்வம் காட்டினாலும் அதன் நன்மைகள் விவசாயிகளை அடைதல் குறைவாகவே இருக்கும்.

இவ்வாறான ஒரு ஒழுங்குமுறையில் வாழை உற்பத்தியாளர் சங்கம் புனரமைப்புச் செய்யப்படுவதுடன் அவர்களின் நடவடிக்கைகள் மீள் ஒழுங்குபடுத்தப்படல் நன்மை பயக்கும்.

மேலே குறிப்பிட்டது போன்று உரியமுறையில் அறுவடை செய்யப்பட வேண்டும். அறுவடை செய்யப்பட்ட குலைகள் ஒரு வீதம் பினோமல் திரவம் கொண்டு கழுவப்படல் வேண்டும். இதற்கு இத்திரவத்தை வெற்றுப்பீப்பா - பரலில் கலந்து அதனில் அமிழ்த்தி எடுத்துப் பயன்படுத்தலாம். உலர்ந்த வாழைச்சருகு பயன்படுத்துதல் நல்லதல்ல. அதனைத் தொற்று நீக்கல் சிரமமானது. இதற்கு எனப் பரிந்துரைக்கப்பட்ட பொலீத்தீனின் பரிமாணம் 175 தடிப்பு 55செ.மீ அகலம் 1.8செ.மீ அகலத்துளைகள் 10செ.மீ இடைவெளியில் இருக்க வேண்டும். குலையின் தார் வெட்டிய பகுதிக்கு பங்கசு நாசினி பசை. (FUNGISIDE PASTE) பயன்படுத்தலாம். தென்பகுதியில் இதற்கு என GINASENA நிறுவனம் வடிவமைத்த AGRI MEC SIKA பெருமளவு பயன்படுகிறது. அறுவடை செய்து ஒரு மணி நேரத்தில் கப்பலில் ஏற்றப்பட வேண்டும் ஏற்றும்பொழுது கூரிய அவதானிப்புடன் செய்யப்பட வேண்டும். துறை முகத்தில் இதற்கென கொட்டகை அமைக்கப்படல் நன்று.

கப்பலில் குளிரூட்டிய கொள்கலன்கள் அவசியம். வெப்பநிலை 15.5°C யில் பேணப்படல் வேண்டும். அறுவடை செய்து 60 மணிநேரத்தில் கப்பலில் ஏற்றப்படுவதுடன் குளிரூட்டல் படிப்படியாகவும் அமைதல் நன்று. திடீர் வெப்பநிலை குறைப்பு பழத்தின் சுவைத் தன்மைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும். இது குளிர் காயமடைதல் (CHILLING INJURY) எனப்படுகிறது. அத்துடன் இதரை இனத்திற்கு இது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இங்கு பழுத்தலை தாமதிக்கச் செய்யும் சில ஓமோன்களையும் பயன் படுத்தலாம். இது குறித்து மிக அவதானமும் இதன் செலவு மற்றும் உடல தாக்கம் குறித்த விழிப்புணர்வும் முக்கியம். அத்துடன் இவ்வாறு ஓமோன் பரிகரிக்கப்பட்ட பழங்கள் உலக சந்தைகளிலும் தற்போது இரண்டாம் தர வரவேற்பையே பெறுகின்றன. இதற்கு தனியான முத்திரை இடப்படல் வேண்டும்.

அத்துடன் காபனீரொக்சைட்டு வாயு குறை அமுக்கத்தில் பயன்படுத்தி பொதி செய்தால் நல்ல பெறுபேறு கிடைக்கப் பெறுகிறது. அப்போது வெப்பநிலை 11.1 - 12.7°C இல் பேணப்படல் வேண்டும். இது ஒப்பீட்டளவில் 100வீத வினைத்திறன் செயற்பாட்டினைக் காட்டும். அத்துடன் பழத்திற்கு மெழுகுப் பூச்சிடல் தொழில் நுட்பமும (WAXING) நல்ல விளைவுகளைத் தருகின்றது. இந்தத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி 60வீத வினைத்திறனுடனும் அறை வெப்பநிலையில் பழங்களைப் பேண முடியும்.

இத்தொழில்நுட்பம் குறித்த சில அடிப்படை ஆராய்ச்சிகள் செய்யப்படல் வேண்டும். அத்துடன் தென்பகுதி சந்தைக்கு நாம் தரத்தினைப் பேணல அத்தியாவசியமானது. அங்கு தற்போது மகாவலியை அண்டிய பகுதிகளில் பெருமளவு வாழைச்செய்கை வெற்றிகரமாக செய்யப்படுகிறது. அவர்களது சந்தைக்கு யானை வாழை, கப்பல் வாழை ஆகியவையே நல்ல கேள்வியைப் பெறும். அத்துடன் இதரையும் நல்ல தரத்தில் இருந்தால் சந்தையில் நல்ல பெறுமானத்தைப் பெறும். வாழைச்செய்கைக்கு மீள்புத்தூக்கம் அளித்தல் ஒரு ஒன்றிணைந்த திட்டமாக வகுக்கப்பட்டு இதில் வங்கிகள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து செயற்பட்டால் இலக்கினை அடையமுடியும். இதன் மூலம் ஓரளவு பாதிக்கப்பட்ட செய்கையாளரும், சார்ந்திருக்கும் தொழிலாளரும் நன்மை பெறுவார்கள்.

## மீள் புத்தூக்கம் உடனடித் தேவை

**பெறுமதி கூட்டல்:**

வாழைக்கு பெறுமதி கூட்டல் தொடர்பான பல்வேறு முறைகள் உலகம் எங்கும் தற்போது நடைமுறையில் உள்ளன. இவற்றில் எமது பிரதேசத்திற்கு ஏற்புடைய சில விடயங்களை மட்டும் இங்கு பகிர எண்ணியுள்ளேன். இதன்மூலம் நிகர வருமான அதிகரிப்புடன் போசாக்கு மேம்பாடும் எமது பிரதேசத்தில் எட்டப்பட முடியும்.

1. வாழைப்பழ ஜாம் தயாரித்தல் இதற்கு உதாரணம் ஆகும். உற்பத்திச் செலவு 35 ரூபா மட்டுமே. இதனை 40 - 45 ரூபாய்க்கு சந்தைப்படுத்தினும் தற்போது கொழும்பு ஜாம வாங்குவோர் செலவிடும் பணத்தை அரைவாசியாக சேமிக்க முடியும் (இது குறித்து பின்னர் விரிவாக ஆராய்வோம்).

2. 60 - 70 வீதம் முதிர்ந்த காய்கள் சிறுதுண்டுகளாக வெட்டி உலர்த்தி அரைத்து பெறப்படும் மா பல்வேறு திண்பண்ட உற்பத்திக்கும் பயன்படும். இது உலகத்தில் சிறந்த குழந்தை உணவாக அமைகிறது. இங்கு உலர்த்தலுக்கு விசேட வடிவமைக்கப்பட்ட சூரிய ஒளி உலர்த்திகள் பயன்படும். அத்துடன் சுகாதாரம் பேணல் முக்கியமானது.

3. அத்துடன் நல்லூர்க் கந்தன் ஆலய பரிபாலன சபையினர், தர்மகர்த்தா ஆகியோர் பஞ்சாமிர்த உற்பத்தியை மேற்கொண்டு கொள்கலன்களில் அடைத்து விற்பனை செய்தால் முருகன் பக்தர்களுக்கு வரபிரசாதமாக அமைவதுடன் பெருமளவு வெளிநாட்டுப் பக்தர்களும் பலனடைவதுடன் உள்ளூர்ப் பொருளாதாரத்திற்குப் பெரும் துணையாக அமையும். இந்து சமய விவகார அமைச்சரும் இது குறித்து கவனத்தில் எடுத்தல் நன்று.


ஆகவே வாழைச் செய்கைக்கு என ஒருங்கிணைந்த திட்டம் வகுக்கப்பட்டு அமுலாக்கப்படாவிட்டால் தமிழர்களின் முக்கனிகளில் ஒன்றான வாழைச் செய்கை படிப்படியாக மந்தமடைந்து உள்ளூர் பொருளாதார விருத்தி பெருமளவு பின்தள்ளப் படும். ☆

**இரா.சர்வானந்தா**

**கமமும் புலமும்**
தயாரிப்பு: ஜெயஸ்ரீ

---


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28 | 02 |
| - | - |
| 02 | 09 |
| - | - |
| 1926 | 2001 |

அமரர்

**கந்தையா செல்வரத்தினம் (இரத்தினம்)**

(பிரபல வர்த்தகர், தபாற்கட்டைச் சந்தி, அரியாலை)

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட பாசம் மிக்க
எமது அன்புத் தெய்வத்துக்கு
எமது இதயபூர்வமான அஞ்சலிகள்!

உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*35, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* - பாசமிகு குடும்பத்தினர். (92848)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 02 |
| - | - |
| 08 | 09 |
| - | - |
| 1938 | 2001 |

**திருமதி நடராசா சரஸ்வதி**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலயம்)

எமது அன்புத் தாயே! எம் குடும்ப ஒளி விளக்கே!
உயர்வு காண்பதற்கே ஓயாது உழைத்த அன்னையே!
ஆறுதல் கூற எமக்கு யாருமில்லையம்மா?
மாதமொன்று ஓடிவிட்டதே! ஆறவில்லை எம் துயரம்!
நீங்கவில்லை உம் நினைவு!

இன்று (02.10.2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது 31ஆம் நாள் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசன நிகழ்வுகளில் வந்து கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள்.

தற்காலிக முகவரி:
*நாகலிங்க முதலியார் வீதி, பருத்தித்துறை.*
(92833)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1941 | 2001 |
| - | - |
| 12 | 09 |
| - | - |
| 27 | 03 |

**அமரர் பொன்னையா வேலாயுதபிள்ளை**

*(இளைப்பாறிய பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கைவங்கி)*

திதி: 02.10.2001

திங்கள் ஒன்று நிறைவில் நினைவஞ்சலி!
எம்மைப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்து!
பல்லாண்டு பாராட்டி சீராட்டி வளர்த்தாய்!
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆத்திப்புலம் சந்திரசேகரனை தரிசிக்கச் சென்றனையோ
தவிக்கிறோம் உங்கள் நினைவால் என்றுமே!

இன்று (02-10-2001) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*சித்தன்கேணி, வட்டு.வடக்கு* (92840) - குடும்பத்தினர்

ஓய்வூதியம் இல்லை என்ற அறிவிப்பால்

# டாக்டர்கள் மீள்நியமனத்திற்கு விண்ணப்பிக்கப் பின்னடிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ். சுகாதாரத் திணைக்கள நிறுவனங்கள் மற்றும் அரசினர் வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள் ஆகியவற்றில் எதிர்வரும் 2002 ஆம் ஆண்டில் மீளநியமனம் பெற்று ஒப்பந்த அடிப்படையில் கடமை புரிய விரும்பும் ஓய்வுபெற்ற டாக்டர்கள், வைத்திய நிபுணர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் ஆகியோரிடம் இருந்து யாழ். சுகாதாரத் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும், மத்திய மருந்தகங்களிலும் ஓய்வு பெற்ற பின்னர் ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனம் பெற்ற டாக்டர்கள், வைத்திய நிபுணர்கள், மருந்துக்கலவையாளர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் ஆகியோர் பணியாற்றி வருகின்றார்கள்.

கொழும்பிலுள்ள பொது நிர்வாக அமைச்சினால் கடந்த 10-07-2001 திகதியிட்டு வெளியிடப்பட்ட புதிய சுற்று நிருபத்தின்படி எதிர்வரும் 2002 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனம் பெறுபவர்களுக்கு அவர்களின் ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது என்றும், கடைசியாகப் பெற்ற சம்பளம் மட்டுமே அலவன்ஸாக வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிணங்க மீள்நியமனம் கோரி விண்ணப்பிக்க விரும்புவோர் 15-09-2001 திகதிக்கு பின்னர் மாவட்ட வைத்திய அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மருந்துவச் சான்றிதழ், அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஓய்வூதியக்கொடை, உரிய சம்பளப்படி நிலையில் சேவையாற்றுவதற்கான சம்மதக் கடிதம், வடக்கு–கிழக்கில் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கு சம்மதம் தெரிவிக்கும் கடிதம் ஆகிய ஆவணங்களை உடனடியாகத் தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ் சுகாதார சேவைபிரதி மாகாணப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மீள் நியமனம் பெறுபவர்களுக்கு இனிமேல் ஓய்வூதியம் பெற உரிமை கிடையாது என்று இந்தச் சுற்று நிருபத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை — தற்போது மீள் நியமனம் பெற்று பணியாற்றி வரும் டாக்டர்கள் மற்றும் உத்தியோகத்தர்களில் பலர் அடுத்த ஆண்டில் தமது ஓய்வூதியம் நிறுத்தப்படும் என்ற அறிவிப்பினால் மீள் நியமனம் கோரி விண்ணப்பிப்பதற்கு தயக்கம் காட்டி வருவதாகத் தெரிய வருகின்றது.

இந்த நிலைமைபற்றி யாழ் சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிமனை வட்டாரங்கள் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளினதும் வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினதும் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை —

யாழ். மாவட்டத்தில் டாக்டர்கள் மீள் நியமனத்திற்கு விண்ணப்பிக்காது விட்டால், இங்கு வைத்திய சேவைகள் பெரிதும் பாதிக்கப்படும் என்றும் —

வைத்தியசாலைகள் சிலவற்றை இழுத்துமூட நேரிடும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (க-135)

## சுண்டுக்குளிப் பகுதியிலுள்ள

# கழிவுநீர் வடிகால் தேங்கி வெள்ளம் ஏற்படும் அபாயம்

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி சனசமூக நிலையத்தின் அருகில் செல்லும் கழிவு நீர் வடிகால் (வெள்ள வாய்க்கால்) நீண்டகாலமாகத் துப்புரவு செய்யப்படாததால் அருகில் அமைந்துள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்க வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் பெய்த மழைவெள்ளம் இன்னும் வடிந்து செல்லாமல் தேங்கி நிற்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

வெள்ளம் தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கமும் அதிகரித்து அப்பகுதிவாழ் மக்கள் காய்ச்சல் போன்ற நோய்களினால் பீடிக்கப்படும் அபாயமும் தோன்றியுள்ளது.

இனி மழைகாலம் என்பதால் மேலும் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் இடம்பெயர்வதைத் தடுக்கச் சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-15)

## கொடிகாமம் பகுதியிலுள்ள

# வீட்டைப் பார்த்துவரச் சென்ற குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்

## பெண்ணை எச்சரித்ததால் வந்த வினை

யாழ்ப்பாணம், ஒக் 2

கொடிகாமம் பகுதியில் உள்ள தனது வீட்டைப் பார்த்துவரச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் அங்கு நின்ற சிருடையினரால் தாக்கப்பட்டு கத்தியால் கீறப்பட்ட நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சின்னத்தம்பி கந்தையா (வயது 53) என்பவரே இவ்வாறு கடுமையான காயங்களுக்கு இலக்கான நிலையில் கடந்த சனியன்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியிலுள்ள தனது வீட்டு வளவில் தன்னந்தனியே நின்ற இளம் பெண் ஒருவரை எச்சரித்து வீட்டுக்குச் செல்லுமாறு தான் அறிவுரைகூறி அனுப்பி வைத்ததாகவும் —

சம்பந்தப்பட்ட பெண் அந்தப் பகுதியில் பதுங்குகுழி அமைப்பதில் ஈடுபட்டிருந்த படையினரிடம் கொடுத்த தகவலை அடுத்து தான் தாக்கப்பட்டதாகவும் —

அந்தக் குடும்பஸ்தர் தெரிவித்தார். (க-7-9--117)

## விஞ்ஞானச் சங்க கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் 'பிரசவ கால தாயின் இறப்பு' எனும் தலைப்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் பெண் நோயியல் வைத்திய நிபுணர் திருமதி ஜி. பவானி கருத்துரையாற்றவுள்ளார். (க-10)

## சங்கத்தானை வாசி படுகாயம்

தென்மராட்சி, ஒக். 2

திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் தொடர்பாகப் படையினருக்குத் தகவல் கொடுத்த குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு படுகாயங்களுக்கு உள்ளானார்.

கடந்தசனிக்கிழமை மாலை துன்னாலைப் பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சங்கத்தானையைச் சேர்ந்த சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை (வயது 59) என்பவரே இவ்வாறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

சங்கத்தானைப் பகுதியில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் நபர் குறித்தே தான் படையினரிடம் முறைப்பாடு செய்ததாகக் குடும்பஸ்தர் தெரிவித்துள்ளார். (க-7-11)

## இலவச தட்டச்சு பயிற்சி வகுப்பு

சண்டிலிப்பாய், ஒக். 2

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் இலவச ஆங்கில தட்டச்சுப்பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆறு மாதகாலம் இப்பயிற்சி வகுப்பு நடைபெறும். (க-135)

## கணனிப்பயிற்சிக்கு விண்ணப்பித்தோர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் முறைசாராக் கல்விப் பயிற்சியில் கணனிப் பயிற்சிக்கு விண்ணப்பித்த மாணவர்களை நாளை புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சந்திக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (க)

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை:

# வடமராட்சியில் 9 மாதங்களில் 151 பேருக்கு எதிராக வழக்கு!

## ஐந்து அரை லட்சம் ரூபா அபராதம்!!

வடமராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட பருத்தித்துறை மதுவரி திணைக்களத்தினர் கடந்த ஒன்பது மாதங்களில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட, பிரதேசத்தைச் சேர்ந்த 151 பேர் மீது வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடம் இருந்து 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி றொகான் சஞ்சேராஜா தெரிவித்தார்.

ஆளணி, வாகனப் பற்றாக்குறையாக இருந்தபோதிலும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் தாங்கள் தீவிரமாக ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்தார். (க-117)

# விடுதலையான யுவதியை வன்னிக்கு அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 2

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்ட யுவதி ஒருவர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு யாழ். நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்ட கிளிநொச்சி, அக்கராயனைச் சேர்ந்த இராமசாமி ரேணுகா (வயது 13) என்ற யுவதியே வன்னிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார்.

நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்ட சமயம் இந்த யுவதியின் பயண ஒழுங்குகளைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் மேற்கொண்டு அவரைச் சொந்த இடத்துக்கு அனுப்பி வைக்குமாறு நீதிமன்றம் தெரிவித்திருந்தது. சொந்த இடத்துக்கு அனுப்பி வைக்கும் வரையும் அவரைத் தொடர்ந்து சிறைச்சாலையில் வைத்திருக்குமாறும் உத்தரவிட்டிருந்தது.

இதன்படி தற்பொழுது பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து நாளை மறுதினம் வியாழக்கிழமை குறிப்பிட்ட யுவதி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் அனுப்பி வைக்கப்படவுள்ளார். (ஐ-10)

# 'சஜிந்த'வில் மா வந்தது

யாழ்ப்பாணம், ஒக். 2

பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்துள்ள 'சஜிந்த' கப்பலில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கும் தனியாருக்குமென ஆயிரத்து 900 மெற்றிக் தொன் மா எடுத்து வரப்பட்டுள்ளது.

இதேவேளை —

காங்கேசன்துறைக்கு வந்துள்ள 'ருகுணுபுர' கப்பலில் நிவாரணத்துக்கான அரிசி, பால்மா ஆகியவற்றுடன் தனியாருக்கென லொறிகள், கார்கள் மற்றும் ஓட்டோக்கள் என்பனவும் எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (க-10-கி)

## இறை தியான வழிபாடு

நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை இறை தியான இல்ல வழிபாடுகள் நடைபெறும்.

இந்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கென இந்தியாவில் முரிங்கூர் என்னும் இடத்தில் இருந்து இறை தியான வழிகாட்டிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (ஐ-17)

## மல்லாகம் சந்தி பஸ் தரிப்பிடத்தில் அவல நிலைமை

வலி. வடக்கு, ஒக். 2

மழையைத் தொடர்ந்து மல்லாகம் சந்தியில் உள்ள பஸ்தரிப்பு நிலையம் வெள்ளம் தேங்கி சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

விதியோரமாகக் காணப்படும் வெள்ளத்தினால் பஸ் நிலையத்தில் தரித்து நிற்பவர்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

வாகனங்கள் விலத்தும் போது வெள்ளநீர் அள்ளி வீசப்பட்டு உடைகள் அழுக்கடையும் நிலைமையும் காணப்படுகின்றது. (க-86)

# உலர்உணவு விநியோகம் குறித்து மக்கள் கருத்தை அறியும் முயற்சி

## அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 2

நிவாரணமாக வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களின் தரம், விநியோகம் தொடர்பாக மக்களின் கருத்து அறியும் நடவடிக்கை ஒன்றை வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு ஆரம்பிக்கவுள்ளது.

இந்த மக்கள் கருத்துத் திரட்டும் நடவடிக்கைகளில் சமுர்த்தி உத்தியோகத்தர்களும், அபிவிருத்தித் தொண்டர்களும் இந்த வாரம் முதல் ஈடுபடுத்தப்படுவர் என்று ஈ.பி.டி.பி. வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலர் உணவு நிவாரணத்துக்காக வழங்கப்படும் பொருள்களுக்குப் பதிலாக வழங்கக்கூடிய வேறு உணவுப் பொருள்கள் பற்றிய சிபார்சுகளையும் —

உலர் உணவு விநியோகத்தைச் செம்மைப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படக் கூடிய சீர்திருத்தங்கள் பற்றிய ஆலோசனைகளையும் விவரம் திரட்டவரும் உத்தியோகத்தர்களிடம் தெரியப்படுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொது மக்களைக் கேட்டுக்கொள்கின்றார்.

உலர் உணவு விநியோகத்தின் மூலமாக வழங்கப்படும் அரசாங்கத்தின் சேவைகள் உரியவர்களுக்கு — உரிய முறையில் — உரியநேரத்தில் கிடைப்பதை உறுதிப்படுத்தவே இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்டவர்களிடம் தெளிவுபடுத்தியுள்ளார் — என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டி
# கொழும்பில் இன்று ஆன்மீக அமைதி உலா

## நாடெங்கும் ஆலயங்களில் விசேட பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,ஒக்.2

உலகில் நிரந்தர சாந்தியும், சமாதானமும் மலர வேண்டும் எனக் கோரி உலக ஆன்மீக எழுச்சிப் பேரணியினர் ஏற்பாடு செய்துள்ள ஆன்மநேய ஒருமைப்பாட்டு அமைதி உலாவும், ஆதிமூல பிரணவரின் பாவநாச யாகம் என்னும் விசேட வழிபாடும் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளன.

கொழும்பு, முகத்துவாரம் அருணா சலேஸ்வரர் ஆலயத்தில் இருந்து இன்று காலை ஆரம்பிக்கும் இந்த அமைதி உலா கொழும்பு நகரின் பிரதான வீதிகள் ஊடாக கப்பித் தாவத்தையில் உள்ள கைலாய நாதர் ஆலயத்தில் நிறைவடையும்.

யுத்தத்தாலும் மற்றும் பல காரணங்களாலும் துன்பத்துள் தள்ளப்பட்டுள்ள எமது வாழ்வு மறுமலர்ச்சி அடையவும் -

மனிதநேயமும், சமாதான வாழ்வும், ஆன்மீக சுதந்திரமும் உடைய ஆன்மீக எழுச்சி ஏற்பட்டு சமூக மறுமலர்ச்சியை உண்டாக்கவும் கோரி ஆன்மீகப் பேரணியினர் இந்த அமைதி உலாவை ஒழுங்கு செய்துள்ளனர்.

இதேவேளை -

சகல இந்து ஆலயங்களிலும் இன்று காலை 7 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை பஞ்சாட்சர மந்திரத்தை இடைவிடாது ஜெபிக்கும்படியும் -

நண்பகல் 12 மணிக்கு ஆலயங்களில் கண்டாமணிகளை ஒலிக்கச் செய்து ஒன்றுபட்ட மனத்துடன், ஒரே குரலில் உலக சமரச சன்மார்க்கப் பிரார்த்தனையை நிகழ்த்துமாறும் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்துக்களின் வீடுகளிலும் இத்தகைய வழிபாட்டினை நிகழ்த்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-7-ரி)

## பல்கலை. பட்டம் பெற்றவர்கள் கலாசாலையில் பயிற்சிபெறத் தடை

### மாகாண கல்வி அமைச்சு அறிவிப்பு

அச்சுவேலி,ஒக்.2

பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெறுவது தடைசெய்யப்படவுள்ளது. இந்த வகையில் ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் அனுமதிபெற்று பயிற்சி பெற்றுவரும் சிலரைப் பாடசாலைக் கடமைக்குத் திரும்புமாறு மகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் உள்வாரியாகவோ, வெளிவாரியாகவோ பட்டம் பெற்ற பலர் தகுதிகாண் பயிலுநர், தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களாக நியமனம்பெற்றுத் தொழிற் தகைமை பயிற்சி பெறுவதற்காக இரண்டு வருட படிப்பு லீவில் ஆசிரியர் பயிற்சி பெறுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவர்களை ஆசிரியர் பயிற்சியை இடைநிறுத்திக்கொண்டு பாடசாலைக் கடமைக்குத் திரும்பிச் செல்லுமாறு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்போது அவர்களுக்கான தொழிற் தகைமைப் பயிற்சி பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி மூலம் வழங்கப்படுகின்றது.

தகுதிகாண், பயிலுநர், தராதரப் பத்திரம் அற்ற ஆசிரியர்களாக நியமனம் பெறுபவர்களுக்கு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் மூலம் அல்லது தொலைக்கல்வித்துறை மூலம் தொழிற்தகைமைப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போது தகுதிகாண் ஆசிரியர் நியமனம் பெற்றவர்களும், பட்டம் பெற்றபின்பு தகுதிகாண் ஆசிரியர் நியமனம் பெற்ற சிலரும் தமது கல்வித் தகைமை தொடர்பான விவரங்களை வெளிப்படுத்தாமல் ஆசிரியர் நியமனங்களைப்பெற்று - இரண்டு வருட படிப்பு லீவு அனுமதியுடன் - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெறுவது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சிபெறும் பட்டதாரிகளின் விவரங்கள் முறைப்பாடுகளாக மாகாணக் கல்வி அமைச்சுக்கும், கல்வி அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டதை அடுத்தே பயிற்சி இடைநிறுத்தி பாடசாலைகளுக்கு அவர்களை மீளக் கடமைக்குத் திரும்புமாறு மாகாணக் கல்வி அமைச்சு கடிதமூலம் அறிவித்திருப்பதாக அறியப்படுகிறது. (க-11)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 10 - 06 - 1917



மறைவு 02 - 09 - 2001

## திருமதி பாக்கியம் அப்புக்குட்டி

*மாதம் ஒன்று ஆனதம்மா!*
*மறக்கவில்லை உங்கள் முகம்*
*திங்கள் ஒன்று சென்றுவிட்டதம்மா!*
*தீரவில்லை எம் துயரம்!*
*பெற்ற எம்மைத் தவிக்க வீட்டுப்*
*பிரிந்து நீங்கள் சென்றதேனோ?*
*மலர்ந்த உங்கள் முகத்தைக்காண*
*மனம்துடிக்கும் மருமக்கள் கூட*
*பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளும்*
*வருந்தி அழுகிறார்கள் அம்மா!*
*எம்மனதை விட்டு அகலாதம்மா*
*என்றும் உங்கள் அழகு முகம்.*

இன்று (02-10-2001) செவ்வாய்க்கிழமை சுதுமலை வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

(92869)


## புல்லுத் துண்டங்கள் விநியோகம்

அச்சுவேலி,ஒக்.2

நல்லினப் புல்லுத் துண்டங்கள் கால்நடை வளர்ப்போருக்கு இலவசமாகக் கோப்பாய் கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் விநியோகிக்கப்படுகின்றன.

என்.பி.21 இன உயர்ரக புல்லுத் துண்டங்களே வழங்கப்படுகின்றன. இவற்றை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாரிமழை ஆரம்பமாகி இருப்பதால் இந்தப் பருவம் புல் நடுகைக்கு ஏற்றகாலம் என்றும், கால்நடை வளர்ப்போர் புல் துண்டங்களை நடுகைசெய்து பலன் பெறலாம் என்றும் கோப்பாய்ப்பிரிவு கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (க-11)

## மானிப்பாய் இந்துவில் கணனிமய நூலகம்

சண்டிலிப்பாய்,ஒக்.2

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உலக வங்கியின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் கணனிமயப்படுத்தப்பட்ட நூலகம் ஒன்று நிறுவப்பட்டு வருகின்றது. மூவாயிரத்து 500 சதுர அடி விஸ்தீரணமுடைய இதற்கான கட்டடம் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருவதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார். (க-135)



**மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளையில் சேமிப்புக் கணக்குகளுக்கான பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் நடை பெற்றது.**

**முகாமையாளர் எம்.சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மக்கள் வங்கியின் வட வலய உதவிப்பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன் பரிசில் வழங்குவதையும் கிளை முகாமையாளர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.** (ஐ)


## சேவைநலன் பாராட்டு விழாவும் பிரிவுபசார வைபவமும்

ஆனைக்கோட்டை உப தபாலகத்தில் தபால் ஊழியராகக் கடமையாற்றித் தற்போது தபாலதிபராகப் பதவி உயர்வுபெற்றுச்சென்ற

உயர்திரு.**பொனிபஸ் இமானுவேல்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவியுயர்வுகளைப்பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

*ஆனைக்கோட்டை.*

உபதபாலரும், ஊழியர்களும், பொதுமக்களும்.

Note: இன்று (02-10-2001) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 (புதிய நேரம்) மணிக்கு யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியா சாலையில் தலைவர் திருவாளர் ந.சிவபாதம் (புத்தொளி J.P) தலைமையில் பிரிவுசார விழா நடைபெறும். (92862)



## யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்
## கணனிப் பயிற்சிநெறி - 2001

யாழ். வலயக் கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் ஆரம்பமாகிய மேற்படி பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் நாளை (03-10-2001) புதன்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு நடைபெறவுள்ளன. விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

அதிபர்,
யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.

(92871)



## துயர் பகிர்கின்றோம்

இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும்
திருமதி கிருஷாந்தி ரவீந்திரா
அவர்களின் அன்புத் தந்தையார்
**இராஜா சேனாதிராஜா**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

நான்காம் வருட நடனத்துறை மாணவர்கள்,
**இராமநாதன் நுண்கலைக் கழகம், யாழ்.பல்கலைக்கழகம்.**



# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மல்லிகனந்த பரமகுலசிங்கம் சந்திரகுமார் என்பவருடைய தே.அ.அ. (இல.761313517V), விசேட அ.அ. என்பன யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மல்லிகனந்த பரமகுலசிங்கம் சந்திரகுமார், அராலி கிழக்கு, வாலையம்மன் கோயில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (92837)

### புறொயிலர் குஞ்சுகள்

பிறிமா, கிறீன்வலி புறொயிலர் குஞ்சுகள் விலை 43/=, பிறிமா சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 461, நாவலர் வீதி, அத்தியடி OR கிளீன்சொட் பின்புறம், யாழ்.பஸ் நிலையம். (92851)

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் எழுத, வாசிக்க, கதைக்க, இலக்கணம், கடித மூலம். ஆசிரியர்: ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி, M.L.S.Cer/Dip.in CIECE (LONDON), நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை; இல.426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (92843)

### வீடு விற்பனைக்கு

கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடன் கூடிய 2 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. முத்துலிங்கம், கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு (ஸ்ரேசன் றோட்). பார்வையிடும் நேரம்: காலை 8-10, மாலை 4-6. (92858)

### திருமண சேவை

1968ஆம் ஆண்டு, மிருகசீரிட நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமுள்ள, 8 பாவமுடைய, பொறியியலாளராகப் பணிபுரியும் மணமகனுக்குப் பொருத்தமான மணப்பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (92860)

### இலகு திருமண சேவை

1966, புரட்டாதி, U.K இல் விவாகரத்துடைய CITIZEN மணப்பெண்ணுக்கு U.K இல் அல்லது இலங்கையில் மணமகன் தேவை. 1963, 1967 ENGINEERS, 1949, R/C, தபால் உத்தியோகத்தர் ஆண்கள் உண்டு. துரைவிமலா, நாச்சிமார்கோயிலடி. (92852)


## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,செப்.2

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் பேறிஞருமாகிய அமரர் வி.சிவசுப்பிரமணியத்தின் நினைவுப் பேருரை எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10மணிக்கு கல்லூரியின் கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ளது.

நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக அதிபர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் 'கல்வி அபிவிருத்தியில் புதிய பாதை' என்னும் கருப்பொருளில் நிகழ்த்துவார். (ஐ-ரி)

## 'அகவொளி' நிலைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.2

குடும்பவளத்துணை நிலையத்தினால் நடத்தப்படும் முழுநிலாக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு குருநகர் பாங்ஷால் வீதியிலுள்ள 'அறிவொளி' குடும்பவளத்துணை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய கருத்தரங்கில் "குடிபோதைப் பிரச்சினைகளும் இளைஞர்களும்" என்ற விடயம் தொடர்பாக சமூக உளநல நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் இர.சந்திரசேகரசர்மா கருத்துரை வழங்குவார். (க-5)

## நூல் வெளியீட்டு நிதிக்கென படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.2

ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகத்தின் நூல் வெளியீட்டு நிதிக்கான திரைப்படக்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை சுன்னாகம் நாகம்ஸ் திரையரங்கில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் காட்சியில் வேதம், சமுத்திரம் ஆகிய படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. (க-ரி)


# வாழ்த்தி வரவேற்கின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று (02.10.2001) வெளியிட்டு வைக்கப்படும், *சோ.பவின்* **'ஆபிரிக்கக் கவிதைகள்'** என்ற நூலை மனமார வாழ்த்தி வரவேற்கின்றோம்.

(C/18483) - சோ.பவின் அபிமானிகள்.



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
## 02-10-2001



HAPPY BIRTHDAY

சோமராஜ் – ஜெயந்தா தம்பதியினரின்
அருமைப்புதல்வன்

## செல்வன் நிலோத்தமன் (துளசி)

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (02-10-2001) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, தாத்தா, பாட்டிமார், மாமா, மாமிமார், பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார் மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் கலைகள் பல கற்று சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*'துவாரகா'*
*மூளாய், சுழிபுரம்.* (92874)

கு.சோமராஜ்.
(அப்பா)



# பாராட்டுகின்றோம்



சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய
பிரதமகுரு
வேதாகம சோதிடபூஷணம்
**சிவஸ்ரீ**
**சி.சிதம்பரநாதக்குருக்கள்**
(திருக்கணித பஞ்சாங்கக் கணிதர்)

அவர்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் இலண்டனில் இடம்பெற்ற சைவத் திருக்கோயில்களின் நான்காவது மாநாட்டில் அதிதியாகப் பங்கேற்றுச் சிறப்பித்தமை குறித்தும் -
அங்கு அவர்களுக்கு

*"வேதாகம வித்தகர்"*

என்ற சிறப்புப் பட்டம் கிடைத்தமை குறித்தும் எமது நல்வாழ்த்துக்களைக் கூறி பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருப்பணிச்சபை - தொண்டர்சபை,
(92873) சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம்.



U.N.H.C.R. நிறுவனத்தின் அனுசரணையுடன்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
கோப்பாய் பிரதேச செயலர்
இணைந்து நடத்தும்



# இலவச சுயதொழில் ஊக்குவிப்பு பயிற்சிகள்

போர் அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து உயர்கல்வியைத் தொடரமுடியாத இளைஞர், யுவதிகளுக்காக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் முன்னெடுக்கும் இத்திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சிநெறிகள்**

1. வீட்டு மின்னிணைப்புப் பயிற்சி (வயறிங்)
2. ரீ.வி, றேடியோ திருத்துதல் பயிற்சி
3. தையல் இயந்திரம் திருத்துதல் பயிற்சி

பயிற்சி நெறிகளில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் 10.10.2001 ஆம் திகதிக்கு முன்பு சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

*பயிற்சி நடைபெறும் இடம்:-* உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-**
**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், (T.R.R.O.)**
*106, 4 ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (C/18478)


## வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்தத்தையொட்டி கடலுக்குச் செல்ல அனுமதி

வடமாரட்சி,ஒக்.2

இன்று இடம்பெறும், வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சமுத்திரத் தீர்த்த உற்சவத்துக்காக, இன்று பக்தர்கள் பிற்பகல் 2 மணி முதல் 6 மணிவரை கடற்கரைக்குச் செல்ல அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் -

கோயிலில் இருந்து கடலுக்குச் செல்ல, கொடி கட்டி அடையாளமிடப்பட்ட பாதையை மட்டுமே பக்தர்கள் உபயோகிக்கும்படியும் -

வேறு பாதைகளைப் பயன்படுத்தி கடலுக்குச் செல்ல எவரும் முயற்சித்து, உற்சவத்தை இடையூறு செய்யவேண்டாம் என்றும் -

ஆலய அறங்காவலர் சபையினர் கேட்டுள்ளனர். (ஓ-173)

## ஆபிரிக்கக் கவிதை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்பல்கலைக்கழகத் தமிழ் மன்ற ஆதரவில் சோ.பத்மநாதனின் 'ஆபிரிக்கக் கவிதை' என்ற நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் பண்டிதர் க.சச்சிதானந்தன் தலைமையில் நடைபெறுகிறது.

கலாநிதி சி.சிவலிங்கராசாவின் தொடர்கட்டுரை, பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன், பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் ஆகியோரின் ஆசியுரைகள், பேராசிரியர் சபா.ஜெயராசாவின் வெளியீட்டுரை, பேராசிரியர் அ.சண்முகதாஸ், 'சிற்பி' சி.சிவசரவணபவன் ஆகியோரின் ஆய்வுரைகள் என்பன இடம்பெறவிருக்கின்றன. துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை முதற்பிரதியைப் பெறுகிறார். (ஓ-3)

## பாடசாலை மட்ட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.2

'முரண்பாடுகளைத் தீர்த்தல்' தொடர்பாக மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலை மட்டத்தில் நடத்திவரும் கருத்தரங்குத் தொடரின் நிகழவு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் கலவன் பாடசாலையில் இடம்பெற உள்ளது.

திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம், திருமதி புஸ்பா சின்னையா, திருமதி தனலஷ்மி விஸ்வநாதன், அ.குமாரவேல் ஆகியோர் கருத்துரை வழங்கும் இந்த நிகழ்வில், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் ஏ.எம்.அருணாச்சலம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ)

## வீட்டின் மீது பனைமரம் வீழ்ந்து சிறுவன் காயம்!

தென்மராட்சி,ஒக்.2

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீசிய கடுங்காற்றினால் பனைமரம் ஒன்று முறிந்து அருகில் இருந்த வீட்டின் மீது வீழ்நதது இதில் வீட்டிலிருந்த சிறுவன் காயமடைந்து வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் பரவலாக வீசிய கடும் காற்றில் வாழைகள் உட்பட ஏராளமான பயன் தரும் மரங்கள் முறிந்து வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது. (ஓ)

## டிறிபேக் கல்லூரி மாணவர்களின் அ.அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.2

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மூலம் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த ஒரு தொகுதி மாணவர்களின் அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன என்றும் -

சம்பந்தப்பட்ட மாணவர்கள் நேரில் சமுகமளித்து அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண வகுப்பு மாணவர்களுக்குரிய அழகியல், தொழில்நுட்பப் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளன என்றும் -

சம்பந்தப்பட்ட மாணவர்கள் கல்லூரி தற்போது இயங்கும் கோண்டாவில், நிரு கல்வி நிலையத்தில் நேரசூசியைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-7)


# 45ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை செல்வி ராதிகா கனகரட்ணம் அவர்களின் அன்புச் சகோதரன்

## கனகரட்ணம் முகுந்தன்

அவர்களின் 45ஆவது நினைவு நாளில் அன்னாரின் பிரிவில் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஆத்மா சாந்தி அடைவதாக!*

அதிபர், ஆசிரியர்கள்
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்,
(92859) வண்ணார்பண்ணை.


# மரண அறிவித்தல்கள்


## திருமதி கந்தையா இராசம்மா

(வாரிவளவு, காரைநகர்)

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி கந்தையா இராசம்மா 28.09.2001 வெள்ளிக்கிழமை அன்று காரைநகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சோமு - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கோவிந்தர் - தங்கமுத்தாள் தம்பதியினரின் அன்பு மருமகளும், கோ.கந்தையா (முன்னாள் வர்த்தகர், பாணந்துறை, தங்கொட்டுவ) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஞானப்பிரகாசம் பாக்கியம் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் (மலேசியா), வேலுப்பிள்ளை (மலேசியா), தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், றோயல் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. விஜயரட்ணம் (கனடா), சிவலிங்கம், சுந்தரலிங்கம் (வவுனியா), கனகலிங்கம் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), கனகேஸ்வரி, சண்முகலிங்கம் (பொறியியலாளர் - U.K.) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகௌரி, சந்திராதேவி, ஞானவதி (கணக்காளர் - ஆஸ்திரேலியா), குணரட்ணம் (குகன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), சாந்தி (U.K.) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வினோதினி, பிரகாஷ், நவகரன், கோகுலன், ஜனகன், இளமாறன், மதிவதனா, தர்சனா, கார்த்திகா, யமுனா, தயாநிதி, செந்தூரன், குகவதனா, திருக்குமரன், திருவரங்கன், திருமுருகன், சரவணன், சாம்பவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திருமதி விஜயரட்ணம், விமலாதேவியின் சிறிய தாயாரும், சரஸ்வதி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (பென்ரம் - மலேசியா), முத்தையா, மீனாட்சிப்பிள்ளை, சுந்தரம்மா, ஞானப்பிரகாசம் (ஆயுள்வேத வைத்தியர்), மோகனாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2001) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் இல.119, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.119,இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (C/18481)

தகவல்:
கோ.கந்தையா
(கணவன்)



## திருமதி கந்தையா பொன்னம்மா

கட்டுவன், தண்ணீர்த்தாழ்வைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பொன்னம்மா நேற்று (01.10.2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் கந்தையாவின் அருமை மனைவியும் சர்வேஸ்வரி (பிரான்ஸ்), சத்தியேஸ்வரி (பண்ணாகம்), ஞானேஸ்வரி (மல்லாகம்), கேதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலநாதன் (பிரான்ஸ்), தவத்துரை (ப.நோ.கூ.சங்கம், சங்கானை), திலகவதி (லண்டன்), ஸ்ரீதர் (மல்லாகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் உதயனி, உஷாயினி, தனுசியா (பிரான்ஸ்), பிரதீபா, கஜமுகன், சியாமுகன், மிதுஷா (பண்ணாகம்), வக்சன், சுகனியா (மல்லாகம்), தக்சன், தக்ஷா, தர்ஷிகா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் கபிலாஸின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2001) செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.* (92875)

தகவல்: தவத்துரை (மருமகன்)



## மனுவல்பிள்ளை அல்பிரட்

இளவாலையைச் சேர்ந்த மனுவல்பிள்ளை அல்பிரட் அவர்கள் நேற்று (01.10.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஞானத்தம்மாவின் அன்புக் கணவரும் அமலதாஸ் (பிரான்ஸ்), இமெல்டா (ஆசிரியை, சென்.ஜோசப் வித்தியாலயம், கொழும்புத்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரேசா (பிரான்ஸ்), நிசாபதி ஆகியோரின அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (03.10.2001) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இளவாலை அன்னம்மாள் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இளவாலை.* (92381)

தகவல்:
திருமதி N.இமெல்டா (மகள்)



## திருமதி சிவமகாதேவி பரமநாதன்

அரியாலை, பாரதி வீதியைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி சிவமகாதேவி பரமநாதன் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆசிரியர் பரமநாதன் அவர்களின் அன்பு மனைவியும், ஆனந்தி, சுகந்தி, அகிலன், முகுந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (ஷண்ணர்) அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திருவருட்செல்வம் மற்றும் சந்திரமோகன், அஜந்தா, நொகான் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பஞ்சரத்தினம், தங்கம்மா மற்றும் நடராஜா, விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் குகேந்திரன் (யாழ்.பரியோவான் கல்லூரி, உயர்தர மாணவன்), அபிநயா, ராகுலன், தீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.18, பாரதி வீதி, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (02.10.2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல. 18, பாரதி வீதி,*
*கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
திருமதி ஆனந்தி திருவருட்செல்வம்
(மகள்) (92872)

# வெடிகுண்டுகள் நிரம்பிய காரில் வந்து காஷ்மீர் சட்டமன்றத்தின்மீது மோதல்!

## இந்தத் தற்கொலைத் தாக்குதலில் 30பேர் பலி!

ஸ்ரீநகர்,ஒக்.2

இந்தியாவின் பிரச்சினைக்குரிய மாநிலமாகக் கருதப்படும் காஷ்மீரின் சட்டசபைக் கட்டடத்தின்மீது தீவிரவாதிகள் நேற்றுப் பிற்பகல் வெடிமருந்து நிரப்பப்பட்ட மோட்டார்க்காரை மோதி நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 30 பேர் வரை உயிரிழந்தனர்.

தலைநகர் ஸ்ரீநகரில் உள்ள சட்டமன்றக் கட்டடத்தில் இலையுதிர் காலக் கூட்டத் தொடர், முன்பு தீர்மானிக்கப்பட்ட திகதிக்கு ஒருவாரம் முன்பாகத் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்திலேயே இந்தத் தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக காஷ்மீர் சட்டசபை வளாகப் பாதுகாப்புப் பணியைப் பொறுப்பேற்றுள்ள மத்திய ரிசேர்வ் படையின் பேச்சாளர் ஒருவர் கூறுகையில் -

சட்ட சபை வளாகத்தின் பிரதான வாசல் அருகே வந்து நின்ற 'டாடா சுமோ' ரக வாகனத்தில் இருந்து பொலீஸ் சீருடை அணிந்த மூவர் இறங்கி கண்மூடித்தனமாகச் சுடத் தொடங்கியதாகவும் -

அப்போது அந்த வாகனம் வேகமாக வளாகத்துக்குள் நுழைந்து விட்டதாகவும் -

அங்கு மேலும் சில தீவிரவாதிகள் இறங்கிவிட, ஒருவர் மட்டும் வாகனத்தை ஓட்டிச்சென்று சட்டசபைக் கட்டடத்தின் மீது மோதி வெடிக்கவைத்ததாகவும் -

அந்தச் சமயத்தில் வளாகத்துக்குள் கிரனேட்டுகள் வீசப்பட்டதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தப்பட்டதாகவும் - தெரிவித்தார்.

சில நிமிடங்களிலேயே நிகழ்ந்து விட்ட இத்தாக்குதலையடுத்து, மத்திய ரிசேர்வ் படையினர் எதிர்த்தாக்குதல் தொடுத்ததில் தீவிரவாதிகளுடன் மோதல் ஏற்பட்டதாகவும் -

இதில் இரு பொலீஸார் மற்றும் ஒரு தீவிரவாதி உயிரிழந்ததாகவும் -

மற்றைய தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டதாகவும் - அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

சட்டசபைக் கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில், எதிர்ப் பக்கமிருந்த கட்டடங்களும் சேதமடைந்தன.

இறந்தவர்களில் காஷ்மீர் சட்டசபையின் பிரதான உறுப்பினர்கள் சிலரும் அடங்குவர் என்று கூறப்படுகின்றது.

தீவிரவாதிகளின் தாக்குதல் நடந்துகொண்டிருந்தபோதே, பத்திரிகை அலுவலகங்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தன்னை காஷ்மீர் தீவிரவாத இயக்கமொன்றின் உறுப்பினர் என்று அறிமுகப்படுத்திக்கொண்ட நபர் ஒருவர், தமது அமைப்பு, கார் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை சட்டசபை மீது நடத்துவதாகக் கூறியதாகப் பேசப்படுகிறது.

அமெரிக்க விமானத் தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான்களுக்கு எதிராக இந்திய அரசு எடுத்துள்ள நிலைப்பாட்டை காஷ்மீர் மாநில அரசு ஆதரித்தது குறிப்பிடத்தக்கது. (உ-ஒ-4)

# அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு சுந்தரலிங்கம் நியமனம்?

17ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் புதிதாக அமைக்கப்படவிருக்கும் அரசமைப்புக் கவுன்ஸிலில் தமிழ் மக்களின் சார்பில் இளைப்பாறிய நீதிபதி வி.சுந்தரலிங்கம் உறுப்பினராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக இளைப்பாறிய நீதிபதி வி.சுந்தரலிங்கம், சட்டக்கல்லூரி விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் ஆகியோரின் பெயர்களை தமிழர் விடுதலைக் கூட்டணியும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸும் சேர்ந்து சிபார்சு செய்துள்ளதாக அறியவருகிறது.

இருவரில் ஒருவரான தமிழ்மாறன் இந்தப் பதவியை ஏற்க விருப்பம் தெரிவிக்காததை அடுத்து -

சுந்தரலிங்கமே தமிழ் மக்களின் சார்பில் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு உள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவில் ஓர் ஆணையாளராக முன்னர் பணியாற்றிய வி. சுந்தரலிங்கம் அவ்வேளையில் செம்மணி புதைகுழி விவகாரங்களை அம்பலப்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அரசமைப்புக் கவுன்ஸிலின் முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழர்கள் சார்பில் பிரதிநிதிகளை நியமிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாகவும் -

அவ்விரு சமூகங்களைச் சேர்ந்த அமைப்புக்கள் இது விடயத்தில் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருப்பதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

பத்து உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸிலில் ஐந்து உறுப்பினர்களை பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் சேர்ந்து நியமிப்பர்.

தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் ஆகிய இனத்தவர்களின் சார்பில் அந்தந்த இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் இணக்கத்தோடு தலா ஒவ்வொருவர் நியமிக்கப்படுவர்.

இது தவிர,ஜனாதிபதி ஒருவரையும் நாடாளுமன்றத்தில் எதிர்தரப்பில் உள்ள சிறுபான்மைக் கட்சிகள் தங்களுள் காணப்படும் இணக்கத்தின் அடிப்படையில் ஒருவரையும் நியமிப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.


சுடர் ஒளி

07.10.2001 இதழில்

☛ வன்னி மண்ணில் சங்கர் சிந்திய செங்குருதி
☛ புலிகளின் பதிலடி எங்கே? வடக்கிலா. கிழக்கிலா?
☛ அரசமைப்புத் திருத்தம் தமிழ் மக்களுக்கு வருத்தம்!
☛ தமிழகத் தேர்தல் கூட்டுகளில் தலைகீழான மாற்றங்கள்
☛ ஆப்கனில் அமெரிக்கா தாக்குதலுக்கு தயாராகின்றது!
☛ உயிர் பறிக்கும் கண்ணிகள் குடாநாட்டுக்கு அச்சுறுத்தல்!
☛ நல்லூருக்கு சாமி காவ வந்தவர்கள் ஆசிரியர்களை வதைக்கலாமா?
☛ புனித திருக்கோணேஸ்வரர் ஆலயப் பகுதியின் அதோகதி!
☛ மற்றும் பல சுவையான அம்சங்கள் (C/16486)


## 3 மீனவர்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்காக மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் கடலுக்குச் சென்று கடற்கொந்தளிப்பில் சிக்கிய 22 மீனவர்களில் 19பேர் ஏற்கனவே மீட்கப்பட்டது தெரிந்ததே. (உ-ஒ-117-173)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் இந்த ஊர்காவல் படையை அமைக்கும் நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் பஸீர் சேகுதாவூத், ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாகிர் மௌலானா ஆகியோர் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

. இந்த ஊர்காவல்படை அமைப்பது தமிழர் - முஸ்லிம்கள் உறவில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் -

தனது அரசியல் சுய லாபத்துக்காக முஸ்லிம் இளைஞர்களைக் கொண்ட ஆயுதக்குழு ஒன்றை உருவாக்குவதற்கே ஹிஸ்புல்லா முயற்சி செய்கிறார் எனவும் -

நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாகிர் மௌலான தெரிவித்தார்.

## போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர்களைத் தாக்க முயற்சித்ததாகவும் -

இதனையடுத்து அவர்களிருவரும் கைது செய்யப்பட்டதாகவும் -

எஸ்.ஐ.உடுவல்ல மேலும் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு பொலீஸார் சென்ற சமயத்தில், கைதான நபர்கள் சிவப்பு நிற அடையாள அட்டை ஒன்றை போக்குவரத்துத் தொண்டர்களிடம் காட்டி, தாமும் பொலீஸார் தான் எனக் கூறிக்கொண்டிருந்ததாக பொலீஸ் அதிகாரி மேலும் கூறினார்.

கைதான ஒருவர் துணிக்கடை உரிமையாளர் என்றும், மற்றவர் திணைக்கள ஊழியர் என்றும் கூறப்படுகிறது. (உ-ஒ-4)


NEW SCIENCE COLLEGE
DAY CLASS
95 தொடக்கம் 01 வரையிலான கடந்தகால வினாக்களுடன் மாதிரி வினாத்தாள்
R. குகன் (B.Sc.)
செவ்., வியா. - 8.30 - 10 a.m.
ஆரம்பம்:- 4.10.2001 (வியாழன்)
(92853)


# மட்டுநகரில் குண்டு மீட்பு!

மட்டக்களப்பு,ஒக்.2

மட்டக்களப்பு நகருக்கு சமீபமாக கூழாவடியில் ரயில் தண்டவாளத்துககு அருகில் இருந்து நேற்றுக் காலை இரு கிரனேட்டுக்களைப் படையினர் மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டுகள் பின்னர் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன. அந்தப் பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

## துப்பாக்கி மீட்பு!

வவுனியா,ஒக்.2

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் ஜி.பி.எம். ரக தானியங்கி இயந்திரத் துப்பாக்கி ஒன்றை மீட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் பிற்பகுதியில் மிதிவெடிகளை மீட்கும் பணியில ஈடுபட்ட சமயமே இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-4)

## சீன அதிபருடன் ஜனாதிபதி உரையாடல்

கொழும்பு,ஒக்.2

சீன அதிபர் ஜியாங் ஜெமின், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் தொலைபேசி மூலம் உரையாடியதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த உரையாடலின் போது -

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் நீண்டதாக இருக்கும் என்றும்-

அது அனைத்துலக அளவில் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் -

ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்ததாகவும் கூறப்பட்டது. (ஒ-4)

## வெளிநாட்டு சிறைகளில் ஆயிரம் அகதிகள்

எகிப்து, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளின் சிறைகளில் சுமார் ஆயிரம் இலங்கை அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதி அந்தஸ்துக் கோரி வெளிநாடு சென்ற இவர்கள், சட்டவிரோதமாக அந்த நாடுகளுக்குள் நுழைந்ததாகத் தெரிவித்து, தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் -

சிறைகளில் அவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் - கூறப்படுகிறது. (ஒ-4)

## மாலைதீவின் முன்னாள் அதிபரின் மகன் கொழும்பில் கொலை!

மாலைதீவின் முன்னாள் அதிபர் அலி நாஸிரின் மகனான அப்துல் நாஸர் (வயது 45) கொழும்பு, கொகுவெல, பாலபொகுன வீதியில் உள்ள தனது வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு பிணமாகக் கிடந்தார்.

தனியாக இருந்த அப்துல் நாஸரை வீட்டின் பின்புறக்கதவு வழியாக நுழைந்த கொலையாளி கொன்றுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளதாகப் பொலஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன. (ஒ)

## ஊர்காவல்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

தங்கநகரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மீது அடையாளம் தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததாகவும் மற்றொருவர் காயமடைந்து மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் - விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்தது. (ஒ)

## புலமைப்பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ சென்.பற்றிக்ஸ் கல்லூரி - 23
★ யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை - 19
★ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை - 17
★ இணுவில் மத்திய கல்லூரி - 16
★ யாழ்ப்பாணக் கல்லூரி - 15
★ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் - 13
★ பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாச ம.வி. - 12
★ திருக்குடும்ப கன்னியர்மடம் - 11
★ யாழ்.மத்திய கல்லூரி - 10
★ மகாஜனா - 09
★ சுன்னாகம் இராமநாதன் கல்லூரி - 09
★ கோப்பாய் நாவலர் ம.வி. - 09
★ நல்லூர் சென்.பெனடிக்ஸ் ஆர்.சி.ரி.எம்.எஸ். - 08
★ மயிலணி சைவ ம.வி. - 07
★ அருணோதயா - 07
★ கரவெட்டி மாணிக்கவாசகர் - 06
★ பெரியபுலம் ம.வி. - 06
★ ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தி. - 05
★ கரவெட்டி விக்னேஸ்வரா - 04
★ இணுவில் இந்து - 04
★ கன்னியர்மடம் ம.வி. - 04
★ கோப்பாய் சரவணபாவானந்தா - 03
★ யாழ்ரன் கல்லூரி - 03


N.E.I.
நல்லூர்.
சம்ஸ்கிருதம்
O/L, A/L மற்றும் ஏனைய மாணவர்களுக்கும்
03.10.2001
மாலை 4 மணிக்கு
வகுப்புக்கள் ஆரம்பம்.
(92876)

நாவலர்
ஆனைப்பந்தி
★ PHYSICAL CHEMISTRY
ஆரம்பம்:- இன்று 4.00 p.m.
Tue., Wed. - 4 - 5 p.m.
❖ Paper Class
Tue., Wed., Fri. - 5 - 6 p.m.
✹ Inorganic ஆரம்பம்:
05.10.2001 - 3.00 p.m.
By.திரு.அன்பு
(92878)


## முக்கிய அறிவித்தல்

பட்டதாரிகளாக உள்ள தகுதிகாண் பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரும் இன்று (02.10.2001) செவ்வாய்க்கிழமை கௌரவ அமைச்சரைச் சந்திப்பதற்கு 9.30 மணிக்கு முன் (புதிய நேரம்) யா/ஆத்திசூடி சனசமூக நிலையத்தில் (யாழ்.பல்கலைக்கழக மகளிர் விடுதிக்கு முன்) ஒன்றுகூடுமாறு வேண்டுகிறேன்.

*முக்கிய குறிப்பு:-* வரும்போது நியமனக்கடிதம், பட்டச்சான்றிதழ் என்பனவற்றைக் கொண்டுவரவும்.

க.தயாபரன்,
தலைவர்,
பட்டதாரிகளான தகுதிகாண் பயிலுநர் ஆசிரியர் சங்கம்.

*ஐயனார் கோயில் வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில், யாழ்ப்பாணம்.*

(92866)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.